Registered as a Newspaper
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 185
புதன்கிழமை
29 மே 2024
வைகாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"அப்ப எலக்சனை பின்னுக்குப் போட ரணிலார் காய் நகர்த்திறார் கண்டியளோ"

# இரண்டு ஆண்டுகளுக்கு தேர்தல்கள் வேண்டாம்!

## ஐ.தே.க. அவசரக் கோரிக்கை



**கொழும்பு, மே 29**

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றை ஈராண்டுகளுக்கு ஒத்திவைப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அவசரக் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.**

15

# புலிகளை அஞ்சலிக்க அனுமதிக்கமாட்டோம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு!



கொழும்பு, மே 29
போரில் உயிரிழந்த தமது உறவுகளை மக்கள் நினைவுகூரலாம். ஆனால், புலிகளை நினைவுகூருவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

15

# யாழ்ப்பாணம் போதனாவுள் நுழைந்து இருவர் அடாவடி!

## ஒருவருக்கு விளக்கமறியல் மற்றையவர் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மோட்டார் சைக்கிளில் அத்துமீறி உள்நுழைந்த இருவர், பணியாளர்களைக் கடுமையாகத் தாக்கி வன்முறையில்

15

# பொதுவேட்பாளர் விடயத்தை திசைமாற்ற சுமந்திரன் சதி!

## விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 29
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இதுவரையில் தமிழ் தேசியத்தில் பயணித்தவர் அல்லர். பொதுவேட்பாளர் விடயத்தில் ஒரு திசைதிருப்பலை மேற்கொள்ளவே

15

# தேர்தல்கள் ஒத்திவைப்பு; வரவேற்கும் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், மே 29
ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் பிற்போடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார முன்வைத்துள்ள கருத்துகளுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தனது வரவேற்பைத் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்பொழுது இந்த நாடு மிகவும் பொல்லாத பொருளாதாரரீதியான பிரச்சினைகளில் அமிழ்ந்திருக்கின்றது. இவ்வாறானதொருரீதியில் நாங்கள் ஜனாதிபதித் தேர்தலையும்

15

# சோற்றுக்குள் 'மட்டத்தேள்'

யாழ்ப்பாணம், மே 29
திருநெல்வேலியில் இயங்கும் உணவகமொன்றின் சோற்றுக்குள் 'மட்டத்தேள்' இருந்தமையடுத்து, அந்த உணவகத்துக்குச் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

16



## கண்ணிவெடி அபாயம்

# விடுவித்த காணிக்குள் பிரவேசிக்கத் தடை !

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.
விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சுமார் 55 ஆயிரம் சதுர அடி காணியில் கண்ணிவெடிகள் காணப்படக்கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தால் உரிய தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

16

## ஐஸ்போதை நுகர்வு

# பொலிஸ் அலுவலருடன் நான்கு பேர் கைதாகினர்

கிளிநொச்சி, மே 29
ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட நான்கு பேர் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறுப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

16

## மின்சாரக் கட்டணமாக

# 450,000 ரூபா நிலுவை இராணுவத்தினர் ஓட்டம்!

யாழ்ப்பாணம், மே 29
மானிப்பாய் கிறீன் மருத்துவமனையின் ஒருபகுதியில் இயங்கிவந்த இராணுவ முகாமின் மின்கட்டண நிலுவை 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என்றும், அந்தத் தொகையை செலுத்தாமல் இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும்

15

# காலணிகளில் கார்த்திகைப் பூ

## ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 29
பிரபல்யமான நிறுவனமொன்றின் காலணிகளில் கார்த்திகைப் பூ அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளமைக்கு, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரான பொ.ஐங்கரநேசன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.
சம்பந்தப்பட்ட நிறுவனம் குறித்த காலணிகளை சந்தையில் இருந்து திரும்பப் பெறவேண்டும்

16

# மாணவிகளுக்குத் துன்புறுத்தல்: அருட்சகோதரி நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், மே 29
தீவகத்தில் உள்ள பெண்கள் பாடசாலையொன்றின் மாணவிகள் தங்கும் விடுதிக்குப் பொறுப்பான அருட்சகோதரியின் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் 11 மாணவிகள் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதை அடுத்து, குறித்த அருட்சகோதரி கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் தீவகம்

15

# வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு


யாழ்ப்பாணம், மே 29
வங்களா விரிகுடாவில் புதிய வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி ஒன்று உருவாகும் சாத்தியமுள்ளதாகவும், இதனால் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளவுபடாத நாட்டை கட்டியெழுப்புவோம்

*அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு*



**கொழும்பு, மே 29**

**நாட்டின் ஆட்சியாளர்களின் வாழ்க்கையையும் பிரஜைகளின் வாழ்க்கையையும் சமமானதாக கவனிக்கின்ற அரசாங்கமொன்றை தேசிய மக்கள் சக்தி நிறுவும். நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்கின்ற கொள்கைகளையும் இலக்குகளையும் கொண்ட வேலைத்திட்டமொன்றை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்.**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஊர்கள்தோறும் போதைப்பொருள்கள் வியாபித்துவிட்டன. சனத்தொகையில் நூற்றுக்கு 48 வீதமானோர் தொற்றா நோய்களுக்கு இரையாகி வருகிறார்கள். தரமான மருந்துகளை வழங்குதல் மற்றும் சுகாதார ஆராய்ச்சிகளை முறைப்படி மேற்கொள்ளல் ஆகியவற்றிலிருந்து தற்போதைய அரசாங்கம் தவறியுள்ளது. இந்த நிலைமையை முற்றாகவே மாற்றியமைத்து நாட்டு ஆட்சியாளர்களின் வாழ்க்கையையும் பிரஜைகளின் வாழ்க்கையையும் சமமானதாக கவனிக்கின்ற அரசாங்கமொன்றை தேசிய மக்கள் சக்தி நிறுவும்.

மீண்டும் மோதல்கள் ஏற்படாது மூவின மக்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புகின்ற பொறுப்பை தேசிய மக்கள் சக்தி உறுதிப்படுத்தும்.

நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கமொன்றை அமைத்திடுவோம். அதற்காக அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்- என்றார். (ச)

## சிறந்த சுற்றுலாப்பயணம் இலங்கை இரண்டாமிடம்



கொழும்பு, மே 29

ஆசியாவின் மிகப் பிரபலமான பயண இடங்களின்பட்டியலில் இலங்கை 2ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய ஊடகமான 'தி டைம்ஸ் ஒப்' இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கலாசார பாரம்பரியம், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், கடற்கரைகள் மற்றும் வன விலங்குகளுக்கு புகழ்பெற்ற இடமாக இலங்கை திகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த பட்டியலில், இந்தோனேஷியா, தாய்லாந்து, வியட்நாம், இந்தியா, நேபாளம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

## படகின் சுக்கான் உடைவு: பயணிகள் அந்தரிப்பு

அனலைதீவு, மே 29

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து அனலைதீவு நோக்கிப் பயணித்த படகின் சுக்கான் நடுக்கடலில் உடைந்ததால் பயணிகள் அந்தரித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இறங்குதுறையிலிருந்து மாலை 5 மணிக்கு அனலைதீவு நோக்கிப் பயணித்த படகின் சுக்கான் நடுக்கடலில் உடைந்துள்ளது. இதனால் படகு நடுக்கடலில் தத்தளித்த பயணிகளுடன் கரையொதுங்கியது. இதனை அவதானித்த எழுவைதீவுக்குச்சென்ற படகு அங்கு விரைந்து பயணிகளுடன் தத்தளித்த படகை கட்டி இழுத்துச் சென்றது.

பயணிகளுடன் சென்ற படகை இழுத்துச் செல்வதற்கு விசைத்தன்மை போதாது என்பதால் அனலைதீவுக்கு அறிவிக்கப்பட்டது. அங்கிருந்து படகு கொண்டுவரப்பட்டு, படகில் இருந்த மூன்று மோட்டார் சைக்கிள்களின் வெளிச்சத்தில் அனலைதீவு இறங்குதுறைக்கு இழுத்துச் சென்றது. (ஒ-9)

## வவுனியாவில் இதுவரை 123 தொழுநோயாளர்கள்

வவுனியா, மே 29

வவுனியாவில் இதுவரை 123 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில், செட்டிகுளம் பிரதேசத்தில் மாத்திரம் 69 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோயியல் மருத்துவ அதிகாரி சுஜானி தெரிவித்தார்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தொழுநோய் தொற்றும் முறை மற்றும் அதன் அறிகுறிகள், அதற்கான மருத்துவ உதவிகள் போன்ற விடயங்களையும் அவர் தெரிவித்திருந்தார். (ஒ-110)

## பயங்கரவாதப் பட்டியல் தலிபான்கள் நீக்கம்

*ரஷ்யா தெரிவிப்பு*

கொழும்பு, மே 29

தலிபான்களை தடைசெய்யப்பட்டபயங்கரவாதஅமைப்புகளின் பட்டியலிலிருந்து ரஷ்யா நீக்கியுள்ளது.

ரஷ்ய அரச செய்திச்சேவை இதனைத் தெரிவித்துள்ளது.

நாங்கள் மத்திய ஆசியாவில் அனைவருடனும் சமமான உறவைப்பேண விரும்புகிறோம். உண்மையில் தலிபான்கள் தான் ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்கின்றனர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ரஷ்யா தலிபான்களை தடை செய்திருந்தது. கசகஸ்தான் 2023 ஆம் ஆண்டு தலிபான்கள் மீதான தடையை நீக்கியிருந்த நிலையில் இப்போது ரஷ்யாவும் தலிபான்கள் மீதான தடையை நீக்கி யுள்ளதுடன் சென். பீற்றர்ஸ் பேர்க் சதுக்கத்தில் ஆப்கானிஸ்தான் கொடி யைப் பறக்க விடுவதற்கும் அனுமதியளித்துள்ளது. (ச-6)

## மன்னாரில் மக்கள் மேடை

மன்னார், மே 29

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் மக்கள் மேடை என்ற நிகழ்ச்சித் திட்டம் மன்னாரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆரோக்கியமான ஒரு வலுவை சேர்க்கும் விதமாக மக்களின்பிரச்சினைகளை முன்வைக்கும் ஒரு செயற்பாடாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

வன்னி மாவட்டத்தில் தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கருத்துகள் முன்வைக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனியவள மண் அகழ்வு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் அக்கறையின்மை குறித்து மக்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. (ஒ-60)

## நாடகமாடுகின்றனர் சுமந்திரன், சிறீதரன்

*முன்னணி சாடல்*

யாழ்ப்பாணம், மே 29

அடுத்த தேர்தலை இலக்கு வைத்துச் சுமந்திரனும், சிறீதரனும் போடும் நாடகமே உட்கட்சிப் பிரச்சினை. இதனை வடபகுதி மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் சாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் வடக்குக்கான வருகையின்போது "2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அந்த வடபகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன்" எனத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே சட்டத்தரணி க.சுகாஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இதுதான் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா? இது உத்தியோகபூர்வ நிலைப்பாடில்லாவிட்டால் இந்தக் கருத்தை முன்வைத்த சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் சிறீதரன் தயாரா?" என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ச-66)



## மாவாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மே 29


மாவாவுடன் இளைஞனை சந்தேகத்தில் மானிப்பாய்ப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சங்கானையில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது இளைஞனை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது 10 கிராம் மாவா கைப்பற்றப்பட்டதுடன் இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலணியில் கார்த்திகைப் பூ



## தமிழ் மக்கள் விசனம்

**யாழ்ப்பாணம், மே 29**

**இலங்கையிலுள்ள பிரபல காலணி நிறுவனமொன்று தனது காட்சியறையில் கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட காலணிகளை விற்பனைக்கு வைத்துள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

குறித்த காலணிகள் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள காட்சியறையிலேயே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகைப் பூ காலணியின் வடிவமைப்பில் வேண்டுமென்றே உள்வாங்கப்பட்டதா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்தப் பாதணிகளை உற்பத்தி நிறுவனம் மீளப்பெற வேண்டுமென வலியுறுத்தி தமிழ்த் தரப்பினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

(ச-125)

# கண்டி அருங்காட்சியகத்தில் பாகிஸ்தான் காட்சிக்கூடம்

கொழும்பு, மே 29

கண்டியிலுள்ள அருங்காட்சியகத்தில் பாகிஸ்தான் காட்சிக்கூடமொன்றை இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் பாஹிம் உல் அஸீஸ் திறந்து வைத்துள்ளார். இந்தக் காட்சிக்கூடத்தில் பாகிஸ்தானிலுள்ள பௌத்த தொல்லியல் மையங்களின் படங்கள், பௌத்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இடங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-6)

# கட்டுநாயக்க பகுதியில் வாகனம் நிறுத்தத் தடை!

கட்டுநாயக்கா விமானநிலைய வருகைப் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத் தலைவர் பொறியியலாளர் அத்துல கல்கெட்டிய தெரிவித்துள்ளார்.

விமானப் பயணிகளுக்குத் தரமான சேவையை வழங்கவும் கட்டுநாயக்கா விமானநிலைய வருகைப் பகுதியில் ஏற்படும் வாகன நெரிசலைத் தடுக்கவுமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாரதிகளுடன் தரித்து நிற்கும் வாகனங்களும் 30 நிமிடங்களுக்கு மேல் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

# மகாபோதி சங்கத்தில் ஆசி பெற்றார் சரத்!

கொழும்பு, மே 29

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்குடன், முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அநகாரிக தர்மபாலாவால் ஆரம்பிக்கப்பட்ட மகாபோதி சங்கத்தின் பிரதம பிக்குவான பனாகல உபதிஸ்ஸ தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார். நாட்டில் ஊழலை ஒழிப்பதுடன் தேசிய பாதுகாப்புக்கு முதலிடம் கொடுப்பதே தனது பிரதான இலக்கு என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ப-6)

# சிங்கப்பூர் அதிகாரிகள் இலங்கை வருகை

கொழும்பு, மே 29

சிங்கப்பூர் விமான நிலைய குடிவரவு அலுவலக அதிகாரிகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி வருகைதந்த இந்தக் குழுவினர் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பர். கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு அலுவலகத்தை நவீனமயப்படுத்தும் நோக்கில் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சிங்கப்பூர் உள்நாட்டலுவல்கள் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சண்முகத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# புத்தர்சிலை மோசடி சந்தேகநபர் கைது!

புத்தர் சிலையை இந்தியருக்கு ஒரு கோடி ரூபாவுக்கு விற்க முற்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கண்டியைச் சேர்ந்தவரிடமிருந்து சிலையைப் பெற்றுக்கொண்டார் எனக் கூறியுள்ளார்.

இந்தச் சிலை தொல்பொருள் திணைக்களத்திலிருந்து திருடப்பட்டதா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-6)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில்தான் வேட்பாளர்

## அலி சப்ரி தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் எனவும், அத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமையை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் சிறப்பான முறையில் முகாமை செய்தார். அதனால்தான் நாடு மேம்பட்டுள்ளது. அவருக்கு மேலும் ஒரு தடவை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கையும்கூட. அடுத்த தேர்தலில் அவர் நிச்சயம் போட்டியிடுவார். சர்வதேச நாணயநிதியத்தின் கடன் உதவி விரைவில் கிடைக்கப்பெறவுள்ளது - என்றார். (ஓ-44)

# பட்சி தினம் தெரியுமோ?



குளிக்கப்போய் சேறுபூசின மாதிரி எண்டு சொல்லிற வழக்கொண்டு எங்களிட்ட இருக்கு. ஆனால் இப்ப 'வாசிக்கப் போய் வருத்தத்தை வாங்கின மாதிரி' எண்டு அதை மாத்தினால் சரியா இருக்கும்போல. இப்ப எல்லாரும் வைக்கிற ஒப்பாரி என்னெண்டால், 'எங்கட ஆக்களிட்ட வாசிக்கிற பழக்கம் துண்டற இல்லாமல் போட்டுது' எண்டதுதான். எல்லா மேடையளிலையும் எல்லாரும் இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கினம். இன்ரநெற், செல்போன், பேஸ்புக் மாதிரியான சமூக வலைத்தளங்கள் எண்டு மாற்றங்கள் வரத்தொடங்கி, இப்ப ஒருத்தரும் புத்தகங்களையோ, பேப்பரையோ கையால தொட்டுப் பாக்கிறது அரிதான விசயமா மாறிக்கொண்டு வருகுது. இப்பிடிப்பட்ட நிலையிலை, நிறைய ஆக்கள் பேப்பர் வாசிக்கிற இடத்துக்க, போக ஏலாதபடி ஒருவேலை நடக்குது. அதைத்தான் இண்டைக்கு பட்சி சொல்லப்போகுது.

யாழ்ப்பாணத்தில தட்டாதெருச் சந்திக்கு கிட்ட ஒரு வாசிகசாலை இருக்கு. விடிய அந்த வாசிகசாலைக்குப்போனால் கனபேர் கையில பேப்பர் வாசிச்சபடி நிப்பினம். இண்டைய இன்ரர்நெற் காலத்தில இவ்வளவு ஆக்கள் ஒரு வாசிகசாலையில நிக்கினமே எண்டு ஆச்சரியமா இருக்கும். வேலைக்குப் போறவை, பிள்ளையளைப் பள்ளிக்கூடம் விட்டிட்டு வாறவை எண்டு விடியக்காலமை அந்த வாசிகசாலையில ஆக்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் என்ன பிரச்சினை எண்டால், இப்பிடி அங்க பேப்பர் வாசிக்கிறவை ஒருகையாலதான் பேப்பரைப் பிடிக்கோணும். ஏனெண்டால் மற்றக்கையால மூக்கைப் பொத்தினால்தான் அங்கநிண்டு வாசிக்கலாம். அந்தளவுக்கு நாத்தம். ஏன் அப்பிடி நாறுது எண்டு கேப்பியள். அங்கதான் இருக்கு சங்கதி. யாழ்ப்பாண முனிசிபல்காரரின் குப்பை ஏத்திற வாகனமொண்டு அந்த வாசிகசாலைக்கு முன்றோட்டுக்கரையிலதான் ஏத்திக்கொண்டந்த குப்பையைக் கொட்டி, தரம் பிரிச்சு, திரும்ப ஏத்திக்கொண்டுபோறது. குப்பை ஏத்திக்கொண்டு வாகனம் றோட்டில போனாலே நாலைஞ்சு நிமிசம் அந்த இடத்தால போகேலாதபடி நாறும். இதுக்குள்ள குப்பையைக்கொட்டி, தரம்பிரிச்சு, ஏத்திக்கொண்டு போகும்வரைக்கும் என்னெண்டு தாக்குப்பிடிக்க ஏலும்? அதோட குப்பையைக் கொட்டுற இடத்தில நாத்தம் போகாமல் அப்பிடியே இருக்கும். வெசாக் 'தன்சலுக்கு' போன தமிழ்ச்சனங்கள் மாதிரி, அந்தக் குப்பைவாசம் வாற இடத்துக்கு 'நொய்ய்ங்' எண்டு பாட்டுப்படிச்சபடி இலையான்களும் குவிஞ்சிடும். குப்பையில இருந்திட்டு பேப்பர் வாசிக்கிற ஆக்களின்ர உடம்பிலையும் மொய்ச்சு, சுகம் விசாரிச்சுப்போட்டு போகாட்டி அந்த இலையான்களுக்கு பத்தியப்படாது. பிறகென்ன 'பேப்பர் பாக்கப் போனேன், ஒரு வருத்தம் வாங்கி வந்தேன்' எண்டு எல்லாரும்படுக்கையிலகிடந்து முனகவேண்டியதுதான்.

குப்பையை ஏத்துறதும், தரம் பிரிச்சுக் கொட்டுறதும் ஒவ்வொரு நாளும் செய்யவேண்டிய வேலைதான். ஆனால் அதை இப்பிடி ஆக்கள் கூடுற இடத்தில செய் யோனுமோ எண்டதுதான் அங்க பேப்பர் வாசிக்கவாற வையின்ர கேள்வி. கனகாலமா அந்த இடத்திலதான் குப்பையைத் தரம் பிரிக்கினம். இவ்வளவு காலமும் இல்லாமல் இப்பமட்டும் ஏன் உந்தக் குப்பைக் கதை வந்தது எண்டு முனிசிபல்காரரும் எதிர்க்கேள்வி கேக்கக் கூடும். கனகாலமா ஒரு வேலை நடக்குதெண்டதுக்காக அது சரியெண்டு அர்த்தமில்லைத்தானே. கொஞ்சம் தள்ளி, சனப்புழக்கம் இல்லாத இடத்தில குப்பை வாகனத்தை நிப்பாட்டி, அதில உள்ள குப்பையளைத் தரம் பிரிச்சால் ஆருக்கும் பிரச்சினை இல்லையே. முனிசிபல்காரர் கொஞ்சம் மனம் வைப்பினமோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலை எதிர்க்கமுடியாமல் திணறும் வலுவான நாடுகள்!

## கொலம்பியா ஜனாதிபதி விமர்சனம்



லண்டன், மே 29
உலகின் வலுவான ஜனநாயக நாடுகள் இஸ்ரேலை எதிர்க்க முடியாத நிலையில் காணப்படுகின்றன என்று கொலம்பியா ஜனாதிபதி கஸ்டவோ பெட்டிரோ விமர்சித்துள்ளார். வலுவான ஜனநாயக நாடுகளில் உள்ள வங்கிகள், நிதி அமைப்புகளின் உரிமையாளர்கள் காஸாவில் நடக்கும் படுகொலைகளை ஆதரிப்பவர்களாகக் காணப்படுவதால் அந்த ஜனநாயக நாடுகளால் இஸ்ரேலை எதிர்க்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## சூறாவளியால் 16 பேர் மரணம்

புதுடில்லி, மே 29
இந்தியாவின் கரையோரப் பகுதிகள் மற்றும் தெற்கு பங்களாதேஷில் சூறாவளி காரணமாக சுமார் 16 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)



## விமானத்தில் வெடிகுண்டு மிரட்டலால் பெரும் பரபரப்பு

புதுடில்லி, மே 29
புதுடில்லியில் விமானம் ஒன்றுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து அந்த விமானத்தில் இருந்த பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.
டில்லியில் இருந்து வாரணாசிக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை புறப்படவிருந்த இன்டிகோ நிறுவன விமானத்துக்கே வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.
அதையடுத்து அந்த விமானத்தை அதிகாரிகள் தனியிடத்துக்குக் கொண்டு சென்றதுடன், அதிலிருந்த பயணிகள் அவசர வழியில் வெளியேற்றப்பட்டனர்.
அதன்பின்னர் விமானம் முழுமையாக வெடிகுண்டு நிபுணர்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டது. ஆயினும் விமானத்தில் வெடிபொருள்கள் எவையும் கண்டறியப்படவில்லை. (எ-இ)

## “மகாஜனன்” மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 29
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வரலாற்றையும், சாதனைகளையும் தாங்கிவரும் “மகாஜனன்” மலர் வெளியீட்டு நிகழ்வு, முன்னாள் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில், கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகர் மலரின் வெளியீட்டுரையையும், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத்தின் பொதுசன நிர்வாகத் துறை, முகாமைத்துவபீடத் தலைவர் கலாநிதி மா.ரூபவதனன் மலரின் ஆய்வுரையையும் ஆற்றவுள்ளனர். (ம-25-66)

## ஹெரோய்ன் வியாபாரி வடமராட்சியில் கைது!

யாழ்ப்பாணம், மே 29
வடமராட்சி - நெல்லியடிப் பகுதியில் வைத்து, ஹெரோய்ன் வியாபாரி ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக குறித்த கைது இடம்பெற்றுள்ளது.
கைதானவரிடம் இருந்து 200 மில்லிகிராம் ஹெரோய்னும், போதை வர்த்தகத்தில் ஈடுபட்டதன் மூலம் பெறப்பட்டதாக நம்பப்படும் 80 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

### எரியும் நினைவுகள்

## திரையிடலும் உரையாடலும்

யாழ்ப்பாணம், மே 29
எஸ்.சோமிதரனின் இயக்கத்தில் உருவான 'எரியும் நினைவுகள்' ஆவணப்படத்தின் திரையிடலும், காண்பிய ஊடகங்களூடாக எமது கதைகளைச் சொல்லுதல் குறித்த உரையாடலும் யாழ்ப்பாணப் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
தமிழ் சிவில் சமூக அமையத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. நிகழ்வில் குறித்த ஆவணப் படத்தின் இயக்குநர் எஸ்.சோமிதரனும் கலந்துகொள்ளவுள்ளார். (அ-66)




## திடீரென கீழிறங்கிய ராகுல்காந்தியின் மேடை!

புதுடில்லி, மே 29
இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி கலந்து கொண்ட பேரணியின்போது ஒரு மேடை கீழிறங்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவ காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.
பீகார் மாநிலம் பாட்லிபுத்ரா தொகுதியில் லாலு பிரசாத் யாதவின் மகள் மிசா பார்தி போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக ராகுல்காந்தி பரப்புரை மேற்கொண்டுள்ளார். அந்தப் பரப்புரைக் கூட்டம் ஒன்றிலேயே ராகுல்காந்தி இருந்த மேடை கீழிறங்கியுள்ளது.
அப்போது பீகார் எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ்வும் உடனிருந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை. சிவவழிபாடு சிரமங்களைக் குறைக்கும் . பணவரவுக்கு வாய்ப்புள்ளது.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தட்சிணாமூர்த்தி வழிபாடு நலம் சேர்க்கும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலில் சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. பிணக்குகள் நீங்கும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம் :** பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். விநாயகரை வழிபட மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.


**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் விடயத்தில் சிந்தித்து ஈடுபடவும். நற்பலன்கள் அதிகரிக்கும். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சுபச் செய்தி கிடைக்கும். காரியத்தடைகள் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்கன் குடியிருப்புக்குள் யானைகள் அட்டகாசம்!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 29**

**கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் அட்டகாசம் புரிந்து வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் யானைகள் வாழ்வாதாரப் பயிர்களை அழித்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

வாழ்வாதாரத்துக்காக பயிர் செய்யப்பட்டுள்ள பலன் தரக்கூடிய தென்னை, பலா, மரவள்ளி மற்றும் வாழை போன்ற பயிர்களை அழித்து வருகின்றன. யானைகளின் நடமாட்டம் காரணமாக வீட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் சென்று வீடு திரும்ப முடியாத அச்ச நிலை தோன்றியுள்ளது. இரவுவேளைகளில் நித்திரையின்றி காட்டு யானைகள் நுழையாமல் காவல் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான தீர்வை இதுவரையில் எந்த அதிகாரிகளும் பெற்றுத் தரவில்லை. விரைவில் இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25-113)

## ஆற்றலாளர் விருது

யாழ்ப்பாணம், மே 29

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் 63 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அறநியச் சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழைதுர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பங்கேற்கவுள்ளார்.

கொழும்பு லங்கா மருத்துவமனை இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி மற்றும் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர் திருகோணமலை இந்துக்கல்லூரி மாணவன் ஹ.தன்வந்த் ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ச)



வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையின் கோரிக்கைக்கு அமைவாகச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி மேற்படி மருத்துவமனையில் பொருத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையின் அதிகாரி மருத்துவர் தெய்வேந்திரம் மாதவநாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரத் தொகுதியைத் திறந்து வைத்தார். (எ-25-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 29

அராலி மத்தி உலோலைசிட்டி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்தோற்சவமும் நடைபெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் 34 ஆவது ஆண்டு விழா, யாழ்ப்பாணம் கலட்டியிலுள்ள பொது மண்டபமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)



# மதமாற்றங்களுக்கு எதிராக மக்கள் விழித்தெழ வேண்டும்

## சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 29

திட்டமிட்ட மதமாற்றங்களுக்கு எதிராக சைவசமயிகள் விழித்தெழவேண்டும் என வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நடத்திய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு, சபையின் பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு சிறப்புப்பேருரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் அவதரித்திருக்காவிட்டால் தமிழ்நாடு சமண, பௌத்த மதங்களின் கூடாரமாக எப்போதோ மாறியிருக்கும்.

எத்தனையோ இடுக்கண்களையும், சவால்களையும் தாண்டி சைவசமயம் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் நிலைத்து நிற்பதற்கு நாயன்மார்களின் பங்கு முக்கியமானது.

மாற்று மதத்தவர்கள், சைவசமயம் சார்ந்தவர்களை மதமாற்றும் செயற்பாடு இன்று, நேற்றல்ல 15 ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடர்ந்து வருகிறது. மாற்று மதத்தவர்கள் மதம் மாறும் போது முதலில் ஊரிலுள்ள பெரியவர்களை மதம் மாற்ற முற்படுகிறார்கள். இதன் மூலம் அவருக்குப் பின்னாலுள்ள ஒரு கூட்டமே தங்கள் மதத்துக்கு வரும் என அவர்கள் எண்ணுகிறார்கள். அது மாத்திரமன்றி ஒரு பெண்ணை மதம் மாற்றினால் ஒரு குடும்பத்தையே மதம் மாற்றலாம் என்று பெண்களை நோக்கி வலை வீசுகிறார்கள்.

மதம் மாற்றுபவர்களின் எண்ணம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிறைவேறுவதில்லை. குறிப்பாக, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கருகிலுள்ள சிறிய வைரவர் ஆலயமொன்றில் பூசை செய்த பூசகரைக் கிறிஸ்தவர்கள் ஒருவாறு மதம் மாற்றினார்கள். ஆனால், இதனைக் கண்டு மனம் பொறுக்காமல் விழித்தெழுந்த அந்தக் கிராம மக்கள் குறித்த ஆலயத்தைக் கருங்கற்கள் கொண்ட அழகானதொரு கோவிலாக அமைத்துத் தற்போது நிர்வாகசபை மூலம் பரிபாலித்து வருகிறார்கள் - என்றார். (ப-66)



# தனியார் நிறுவனத்துக்கு எதிராக தியோகு நகர் மீனவர் போராட்டம்

நீண்டகாலமாக தொழிலுக்காகக் கடற்கரைக்குச் செல்லும் வீதி தனியார் ஒருவரால் மூடப்பட்டுள்ளது என்று தெரிவித்து சிலாவத்தை தியோகுநகர் மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புலம்பெயர் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான தனியார் நிறுவனம் ஒன்று பாதுகாப்புத் தரப்பினரின் ஆதரவுடன் வீதியை வேலியிட்டு அடைத்துள்ளது என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அந்தப் பகுதியில் விடுதி ஒன்றை அமைத்துவரும் கனேடியத் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றே வீதியை மூடியுள்ளது என்று தெரிவித்துள்ள மீனவர்கள், வீதியை மூடி அடைத்து அமைக்கப்பட்டிருந்த வேலியை அகற்றியுள்ளனர்.

தனியார் நிறுவன அதிகாரிகள் இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகள் மேற்கொண்டதுடன், மீனவர்களில் 5 பேரை முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்துள்ளனர். தனியார் நிறுவன அதிகாரிகள் மீனவர்களின் தொழிலுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி, அடாவடியில் ஈடுபடுகின்றனர் என்றும், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் - என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-25-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் உரிமையில் பங்கம் விளைவிக்காதீர்கள்

## சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 29

**உரிய ஆலோசனையின்றி திருத்தங்கள் மேற்கொள்வதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையும், வேறு சில அமைப்புகளும் வலியுறுத்தியுள்ளன.**

தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் உரிய ஆலோசனைகள் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திருத்தங்கள் சர்வதேச நியமங்களை மீறுவதாக காணப்படுகின்றன.

தொழிலாளர்களின் பாதுகாப்பு உள்வாங்கப்படவில்லை. குறிப்பாக ஆடைகைத்தொழில் துறையில் இது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர் வெளிப்படையான கலந்துரையாடல்களை நடத்திய பின் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ச-6)

# யோகா கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 29

உடல், உள மேம்பாட்டுக்காக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும்.

ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளமுடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ச)

# மீன்களின் விலை சரிவு

யாழ்ப்பாணம், மே 29

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் காற்றின் வேகம் என்பவற்றால் மீனவர்களின் வலையில் அதிகளவான மீன்கள் சிக்குகின்றன.

யாழ்., தீவகம், வடமராட்சி போன்ற கடற்பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக மீன் பிடிபாடு அதிகரித்துள்ளது.

இதனால் சந்தைக்கு அதிகளவான மீன்கள் எடுத்து வரப்படுவதால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# கீரைச்செய்கை பாதிப்பு

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் பெய்த மழையால் கீரைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கூடுதலாக வலி. கிழக்கில் தாழ்ந்த நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கீரைச் செய்கை மழை வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது.

இந்தநிலையில் கீரையின் விலை சந்தைகளில் சடுதியாக அதிகரித்துள்ளன. தற்போது ஒரு கீரைப் பிடி நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)



# ஹொக்கியில் வெற்றி மகுடம் சூடியது யாழ்.பல்கலைக்கழக பெண்கள் அணி

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட, மகேஸ்வரன் வெற்றிக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் வாகை சூடியது யாழ். பல்கலைக் கழக மகளிர் அணி.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணி யை எதிர்த்து பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது. பல்கலைக்கழக அணியின் வீராங்கனை அஞ்சலீனா, ஆட்டம் ஆரம்பமாகி 14 ஆவது நிமிடங்களில், 1 கோலைப் பெற்றார்.

தொடர்ந்து, பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணியானது எதிரணியைத் தோற்கடிப்பதற்காக, முயன்றபோதும் அவர்களால் கோல் எதனையும் பெறமுடியாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இதனால், ஆட்ட முடிவில் 1:0 எனும் கோல் கணக்கில், பல்கலைக்கழக அணி, பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியைத் தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

போட்டியில் சிறந்த வீராங்கனையாக அஞ்சலீனாவும், தொடர் ஆட்ட வீராங்கனையாக நிதர்ஷனாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ப)

# சொற்பொழிவு

நீர்வேலி, மே 29

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில், ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையைத் தொடர்ந்து, 'பெரிய புராணத்தின் சிறப்பும் பயனும்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனின் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறும். (ப)

*** *** *** ***

சிறுப்பிட்டி, மே 29

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-7, சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தைத் தொடர்ந்து, 'மாணிக்கவாசகரும் திருவம்பாவையும்' என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமாரின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 29

இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம்திகதிபுதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இத்தாவில் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

உறுப்பினர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

# சம்பளமில்லா உத்தியோகத்தில் சங்கானை உதவிப் பிரதேச செயலர்

## நியமன அதிகாரியும் அனுமதிப்பு

யாழ்ப்பாணம், மே 29

சங்கானை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் சம்பளமின்றி பணியைத் தொடர்வதுடன், அதேயிடத்தில் 9 ஆண்டுகள் பணியாற்றுவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், 2014ஆம் ஆண்டிலிருந்து அங்கேயே கடமையாற்றி வருகின்றார். அரச பணியாளர் 6 ஆண்டுகள் மாத்திரமே ஒரே நிலையத்தில் பணியாற்றமுடியும் என்றபோதிலும், 9 ஆண்டுகள் சங்கானை உதவி பிரதேச செயலர் ஒரேயிடத்தில் பணியாற்றுகின்றபோதிலும் இடமாற்றம் எவையும் வழங்கப்படவில்லை.

புதவிநிலை அலுவலர்கள் கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஆனால்சங்கானை உதவிப்பிரதேச செயலர் கட்டுப்பணம் செலுத்தவில்லை. இதனால் அவருக்கான சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடான கேள்விக்கு யாழ். மாவட்டச் செயலகத்தால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

அவர் அரச நியமங்களை மீறி ஒரேயிடத்தில் பணியாற்றுவதன் பின்னணியில் அரசியல் அழுத்தங்கள் உள்ளனவா எனத்தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்டபோது, அது நியமன அதிகாரியின் தீர்மானத்துக்கு உட்பட்டது எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நவநாசிசத்தை முறியடிப்போம்

இலங்கையில் நவநாசிசப் பாணியில் தமிழர் குடித்தொகையை மாற்றியமைக்க முயற்சிக்கப்படுகின்றது என்ற ஒரு விடயத்தை பேராசிரியர் பத்மநாதன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். பல அரசதுறைகள், பலம்பொருந்தியவர்கள், செல்வாக்குப் பொருந்தியவர்கள் இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புகள் அதிக அவதானிப்பைக் குவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இது இப்போது மேற்கொள்ளப்படும் முயற்சி அல்ல. பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிகழ்ச்சி நிரலே. வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டு தமிழ்த்தேசிய அரசியல் உருவாகியிருக்கும் நிலையில், தற்போது அந்த முயற்சிகள் தீவிரம்பெற்றிருக்கின்றன என்று கூறலாம். உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின்னர், தமிழர் குடித்தொகையை - தமிழர் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் இலாவகமான முறையில்- அரசாங்க ஆதரவுடன் தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை நீர்த்துப் போகச்செய்யவேண்டுமானால் தமிழர் குடித்தொகையை -தமிழர் குடிப்பரம்பலை -மாற்றியமைக்க வேண்டிய தேவை சிங்கள -பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்களுக்கு இருக்கின்றது. தமிழர் குடித்தொகையை - தமிழர் குடிப்பரம்பலை - மாற்றியமைப்பதன் ஊடாக வடக்கு - கிழக்கு தமிழருடைய தாயகம் என்பதற்குப் பதிலாக, அது யாருடைய தாயகம் என்ற கேள்வியை எழுப்பும் நிலைமை தோற்றுவிக்கப்படும். இதனூடாக இலங்கை பௌத்த - சிங்கள தேசம் என்ற தெற்கின் எண்ணப்போக்கை செயற்படுத்தமுடியும். இந்த நீண்டகாலத் திட்டத்துடனேயே தமிழர் தாயகப் பகுதிகளில் சட்டவிரோதக் குடியேற்றங்களும், பௌத்த மயமாக்கல்களும் அரசாங்கங்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றன என்று கொள்ள முடியும்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கங்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல்கள், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் என்பனவற்றை சிறு சிறு சம்பவங்களாக மட்டுமேகருதி , அவற்றை அலட்சியப்படுத்தினால் மீள முடியா பேராபத்தில் சிக்குவது நிச்சயம். ஏனெனில் அவற்றின் நீட்சியில் ஒரு மிகப்பெரிய சதித்திட்டம் மறைந்திருப்பதை தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் புரிந்துகொள்ளவேண்டும். வடக்கு - கிழக்கை மையமாகக் கொண்டு சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகள் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் - அதைத் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு தமிழர் குடித்தொகையை - குடிப்பரம்பலைக் கட்டிக்காக்க வேண்டியது கட்டாயமாகின்றது. தெற்கால் முன்னெடுக்கப்படும் இத்தகையதிட்டமிட்ட நகர்வுகளுக்கான பதிலடி - அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகை - என்ன என்பதைத் தமிழர் தரப்புகள் தீவிரமாக அணுகவேண்டியது அவசியம். தமிழர் தாயகத்தின் குடித்தொகையை -குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் தெற்கின் இரகசிய முயற்சிகள் வெற்றியளிக்குமானால் வடக்கு-கிழக்கு மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை வலுவிழந்துபோகலாம். வடக்கு- கிழக்கில் உள்ள சிறுபான்மைச் சமூகங்களை இணைத்து நிலைநிறுத்துவதன் ஊடாகவே தெற்கின் நவநாசிச பாணியிலான ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியும். அதைச் செய்யத்தவறுவோமானால் வடக்கு -கிழக்கு யாருடைய தாயகம் என்று வருங் காலங்களில் முட்டிமோத வேண்டியிருக்கும் என்பது மட்டும் நிதர்சனம்.






# சம்பள முரண்பாடுகளை ஆராய்வதற்கு விசேட குழு

## அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, மே 29**

**அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்கு விசேட குழுவொன்றை அரசாங்கம் நியமிக்கவுள்ளது.**

அரச சேவையின் பல துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு துறையிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை பரிந்துரைப்பதற்கு குழுவொன்றை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி வழங்கிய யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய குறித்த குழுவை விரைவில் நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (ச-6)

# வட்டி வீதங்களில் மாற்றம் இல்லை

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை அவற்றின் தற்போதைய நிலைகளில் பராமரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதமாக பராமரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு

மழை காரணமாக நாட்டின் நீர் மின் உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மொத்தமாக நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 15.66 கிகாவோட் மணித்தியாலங்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இது மொத்த மின் உற்பத்தி விநியோகத்தின் 41.91வீதம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாத ஆரம்பத்தில் 8.16 கிகாவோட் மணித்தியால மின்சாரம், நீர் மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மின்சாரசபை தெரிவித்தது. (ச)

# 8 கிலோ கஞ்சாவுடன் நால்வர் கைது

பலாலியில் 8 கிலோகிராம் கஞ்சாவுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக பலாலி பொலிஸாருடன் இணைந்து மருதங்கேணியில் 8 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

நெல்லியடி மற்றும் மருதங்கேணி பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-125)

# இவ்வார இறுதியில் உயர்தரப் பெறுபேறு

கொழும்பு, மே 29

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இந்த வார இறுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சத்து 46ஆயிரத்து 976 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (ச-இ)

**நாளை**

**30.05.2024**

**வியாழக்கிழமை**

**வைகாசி - 17**

சுபநேரம் : 07.22 - 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52

**நாளொரு நல்வார்த்தை**

**தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் மனிதன் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும்.**

**- பெர்னாட்ஷா-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராபா மீதான தாக்குதலை நிறுத்தவேண்டும் இஸ்ரேல்

சிட்னி, மே 29

பலஸ்தீனத்தின் ராபா நகர் மீதான இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் தொடரக் கூடாது என்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-இ)


**மருந்தக உரிமம் விற்பனைக்கு**

இளவாலை வைத்தியசாலைக்கு
அருகாமையில் இளவாலை சேந்தாங்குளம்
பிரதான வீதியில் அமைந்துள்ள
மருந்தகத்தின் உரிமம் மற்றும்
மருந்துப்பொருட்கள், உபகரணங்கள்
விற்பனைக்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 058 8889

(CS5519?) N-1

## மரண அறிவித்தல்



### சிவசுப்பிரமணியம் சுகுமார்
(மகான்)

தோற்றம் 16.08.1956 — மறைவு 21.05.2024

யாழ் வட்டுக்கோட்டை சங்கரத்தையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ். Bobigny யை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் (சின்னமணி) சுகுமார் (மகான்) அவர்கள் 21.05.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற செல்வரட்ணம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருகமகனும். பாலகுமாரியின் அன்புக் கணவரும். தினேஷ். சந்தோஷ். கபிலாஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும். சபினா. நிமாலினி. அஞ்சலிகா ஆகியோரின் அன்பு மாமனாரும். சிவகுமார். தேவகுமார் (அமரர்) விஜயகுமார். சூரியகுமார். சாந்தகுமாரி (அமரர்). நந்தகுமார். வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும். நாகநந்தினி. பாமினி. பவானிதேவி. சத்தியகலா. கிருபாநந்தன். பரமேஸ்வரன் (அமரர்) பாலகணேசன். பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் நிலா. சச்சின் ஆகியோரின் பேரனுமாவார்.

பார்வைக்கு: வியாழன். சனி. ஞாயிறு ஆகிய தினங்களில் பிற்பகல் 15.00 - 16.00 மணிவரை 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse எனும் முகவரியில் வைக்கப்படும்.

கிரியை: 29.05.2024 புதன்கிழமை 8.15 மணிமுதல் 12.00 மணி வரை 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse நடைபெற்று பின்னர் 12.30 மணி தொடக்கம் 15.00 வரை அதே முகவரியில் தகனம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:-
பாலகுமாரி (மனைவி) 0033 650 958139
தினேஷ் (மகன்)- 0033 6 01 95 52 03
சந்தோஷ் (மகன்) 0033 6 51 55 28 99
சபிலாஷ் (மகன்) 0033 6 61 47 04 29
சூரி (சகோதரன்)- 0044 79582 25632
நந்து (சகோதரன்)- 0044 74046 43216
வசந்தி (சகோதரி)- 0049 16298 03688
சிவம் (சகோதரன்)- 0094 77 774 5227
விஜி (சகோதரன்)- 0094 21 20 51 325

தகவல்: குடும்பத்தினர்.
சி.சிவகுமார் (சிவம்) - சகோதரன்
சங்கரத்தை- வட்டுக்கோட்டை
07777 45227

(CR 42512)A-1

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 09 . 1946 — மறைவு 31 . 05 . 2021



### அமரர் பேபிராணி சுப்பிரமணியம்

பார்போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய்
இயற்கையில் இனைந்த எம் அம்மாவே!
எம் உள்ளங்களில் நறுமணம் வீசும் மலராய்
குடி கொண்டிருக்கும் அன்னையே

மூன்றாண்டுகள் காலம் சென்றாலும்
எம் இதயத்தில் உத்தமியாய்
வாழ்கின்ற ஜீவன் நீங்கள் அம்மா
நிழலாய் நின்று வழிகாட்டுகின்றீர்கள்
தென்றல் ஒன்று காற்றாகி வீசிவிட்டு தான்
போகிறது அது நீங்கள் தானோ

**எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்க முடியுமா உங்கள் திருமுகத்தை**


பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 600) V-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 01 . 1936 — இறப்பு 28 . 05 . 2024



### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வுநிலை ஆசிரியர் - அம்மான் வாத்தியார்)

அராலி தெற்கை பிறப்பிடமாகவும் அராலி தெற்கு மற்றும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சபாரத்தினம் அவர்கள் நேற்று (28.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான கணபதிப்பிள்ளை- பருவதம் தம்பதியரின் அன்பு மகனும். அமரர்களான பூபாலசிங்கம் - இரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும். அமரரான இராசபூபதி அவர்களின் பாசமிகு கணவரும். திருமாறன் (UK). அருள்மாறன். அமரரான அருட்செல்வன் ஆகியோரின் அன்புமிகு தந்தையும். யசோதா. கலைவாணி. கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும். மகிதரா. மாதுரி. மயூரி. விசாகன். ஆதித்தன். பிருதுவி ஆகியோரின் பேரன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 602) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1945 — மறைவு 28 . 05 . 2024



### திரு தம்பியப்பா முருகானந்தா

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு தம்பியப்பா முருகானந்தா 28.05.2024 செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லையா பரமேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரி (பேபியக்கா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலாம்பாள் குகானந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளரத்தினம் சிவராஜா ஈஸ்வரராஜா சறோஜினிதேவி கமலேஸ்வரி சிவானந்தராஜா சற்குணராஜா பத்மினி, பத்மநாகபூஷணி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரம்படியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 29.05.2024 இன்று புதன்கிழமை பி.ப. 01.00 மணிக்கு கொக்குவில் கனக்கமரத்தடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பிரம்படி கொக்குவில்.

தகவல்:
ந.ஈஸ்வரராஜா
077 755 5061

(CS 501) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவு வேண்டும்
ஆனால்
கோழைத்தனம்
கூடாது.
துணிவு வேண்டும்
ஆனால் தலைக்கனம்
கூடாது.
- சோக்கிரட்டீஸ்



## விரல்கள் விளையாடிக்கொண்ட



# வீணை, தபேலா அரங்கேற்றங்கள்

■ கே.எஸ். சிவஞானராஜா

ஒரேமேடையில் அரங்கேறிய இந்த இரண்டு அரங்கேற்றங்களும் இலங்கையின் இசை வரலாற்றில் பதியப்பட வேண்டியவையே. ஒன்று வீணை அரங்கேற்றம். மற்றையது தபேலா அரங்கேற்றம். இரண்டு மாணவச் சிட்டுகளின் பிஞ்சு விரல்கள் இழையோடி விளையாடிய பிரமாதமான அளிக்கைகளை அரங்கம் நிறைந்த ரசிகப் பெருமக்கள் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கனிந்த முருக வாசனையோடு அண்மையில் அனுபவித்தார்கள். அடேயப்பா! நான்கு மணித்தியாலம் எப்படிக் கரைந்து போனதோ யாம் அறியோம். மண்டபமானது களைக்காமல், சளைக்காமல், எழும்பாமல், குழப்பாமல் அமைதியாக இருந்து தளராது வெல்லப்படுகிறது என்பதற்கு தக்க சான்றாக இந்த இரண்டு அரங்கேற்றங்களும் அமைந்துவிட்டன என்பது மகிழ்ச்சியே.

மாதா, பிதா, குரு, தெய்வ சமூக வாலாயம் இல்லாவிட்டால் எந்தவொரு காரியமும் சித்திக்கவும், சிந்திக்கவும், சீர்பெறவும் இயலாமல் போய்விடும். இந்த மாணவர்களுக்கும் இவை அத்தனையும் வரமாக அமைந்துவிட்டன. இவையே சிகரம் தொடவைக்கும் என நம்பலாம். வீணை அரங்கேற்றம் நிகழ்த்திய தீக்ஷனாவின் பெற்றோர் திருமதி குமுதா உமாகாந்தன் தம்பதிகள், ஓர் இசைஞானக் குடும்பம். திருமதி குமுதா உமாகாந்தனே தீக்ஷனாவுக்குத் தாயாகவும், வீணைவாத்தியக் குருவாகவும் அமைந்து வெற்றிகொண்டுள்ளார். அதேபோல, திருமதி மயூரன் யாழினி குடும்பத்தவர்களும் கலை மேவும் மனோதர்மம் மிக்கவர்கள். மயூரன் ஆரணனின் தபேலா வாத்திய சிட்சைக்குருவாக அமைந்தவர் கலாவித்தகரும், லய வித்துவானுமாகிய கனகசபை சிவகுமார் ஆவார். குருவாக அமைந்த இருவரும் தத்தம் வாத்தியத்தில் சித்தம் தெளிந்தவர்கள் மட்டுமல்ல, சிட்சையைக் கொடுப்பதில் அர்ப்பணிப்பானவர்களும் கூட. இதற்கும் அப்பால் தெய்வமாக இருந்து அரங்க பூசைகளை நிறைவேற்றிய சிவஸ்ரீ.கனக.கிருஷ்ண நாதக்குருக்களின் ஆசீர்வாதமானது மிகவும் பெறுமதியானதாகும். மேலும், சென்.ஜோன்ஸ் கல்லூரி சமூகமானது ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கி வருகின்ற பலருள் ம.ஆரணன் சித்திகரமானவர். இவர் மூலம் கல்லூரிச் சமூகம் பெருமையடைகிறது.

அதேபோல, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி சமூகமானது புலமைமிகு ஆளுமைமிக்க மாணவிகளை உருவாக்கி வருகின்ற அநேகருள் தீக்ஷனா உமாகாந்தன் கலைப் பேறுகொள்கிறார். பொதுவாகவே பாடசாலைகளை மாணவர்கள் ஆளுமைப்படுத்துவதில் வெற்றிகாண்கின்றன. மேற்படி பாடசாலைகள் அதனைச் செவ்வனவே நிறைவேற்றுகின்றன.

மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடுகள் இனிதே நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, சிறப்பாக தலைமையுரை, நேர காலமேடை தர்மம் கருதியதாய், மிகவும் இரத்தினச் சுருக்கமாய், பாரம்பரிய இசைமரபுகளை எடுத்தியம்பி, அழகு தமிழ் நடையிலே, அரங்க நிகழ்வுகளைப் பொழிப்பாக்கி இயம்பிய பாங்கு சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான குமரேசன் புரந்தரனின் அறமாகும். தலைமை உரையானது ஓர் அரங்கேற்றத்தில் நேரகால சேமிப்பினைக் கொண்டிருக்குமானால் ரசிகப் பெருமக்கள் தவம் செய்தவர்களாக நோக்கப்படும்.

★★★★★

சரியாக மாலை 5.50 மணிக்கு அரங்கம் சுருதிவசமாகி நாதமயமாகிறது. மேடையில் ஆயிரம் கண்கள் பூக்கின்றன. நவராகமாலிகா வர்ணத்துடன் அரங்கேற்றம் களைகட்டுகிறது. சங்கீத பூஷணம் எல்.திலகநாயகம் போல் திருமதி குமுதா உமாகாந்தனின் குருவாக அமைந்த காரணத்தால் குரு சமர்ப்பணமாக அமரத்துவ ஆன்மாவுக்கு இந்த தான வர்ணம் சமர்ப்பணமாகிறதுபோல் அவர்கள் மிகவும் பிரபல்யமான குரல் விரல் சாகித்திய பல்லவி பாங்கான வித்தகரும், கர்த்தாவும் ஆவார். ஒன்பது இராகங்களினால் பின்னப்பட்ட உருப்படி லாவண்யமாய் சபையை வசீகரித்ததுபோல அரங்க உருப்படிகளும் ஒன்பது ஆகும். ஒன்பது என்ற சாதனைக்குரியதொன்றாகும்.

தொடர்ந்து, ஹம்சத்வனி, ஹம்சானந்தி, சுத்த தன்னியாகி உருப்படிகளைத் தொடர்ந்து, குமுதா உமாகாந்தனின் சொந்த சாஹத்தியமான இராகம், தானம், பல்லவி என்ற அரங்கேற்றத்தின் உயிர்நாடியான மனோதர்ம உருப்படியானது, அரங்கப் பிரவேசத்தினைப் பொலிவாக்கி ஆக்கிரமித்தது. கண்ட திரிபுடையதாளம் என்பதும் ஒன்பது எண்ணை ஆதிக்கமாகக் கொண்டதால் பல்லவி கனதியாகச் சபையைக் கச்சிதமாக்கியது. ஹேமவதி இராகம் பிரதிமத்திமராகமாக அமைந்தமையால் மாலை நேர காலமதை வசந்தகாலகோலமாக்கிற்று. ஆரோக, அவரோக, டாலு, ஸ்புரித, கம்பித, ஆகத, பிரத்யாகத, திரிபுச்ச, ஆந்தோள, மூளச்சனா ஆகிய பத்துவித தோற்றுவாய்களையும் எம்மால் வருட முடிந்தது.

★★★★★

இராக ஆலாபனையில் அக்சிப்திகா, ராகவர்த்தனி, ஸ்தாயி ஆகிய மூன்று அம்சங்களும் வீணையில் தீக்ஷனாவால் காப்பாற்றப்பட்டது. பல்லவியின் பதத்தை லயத்தில் வின்னியாசப்படுத்துவது இலகுவான காரியமல்ல. பல்லவி அமைந்த காலம் கீழக்காலம், திஸ்ரம், இரண்டாம் காலம், நிரவல், கற்பனாஸ்வரம், இராகமாலிகா கற்பனாஸ்வரம், தீர்மானங்கள் என கனதியாக விளங்கி கலாரசிகர்களுக்கு வியப்பூட்டுவது பல்லவியாகும். வீணை, மிருதங்கம், வயலின், கடம், தபேலா கலைஞர்களால் பல்லவி உயிர்பெற்றது. தானம் எனப்படுவது இராக ஆலாபனைக்கு அடுத்தாற்போல மத்யம கால இராக ஆலாபனையாக 'தானம் தன்மத ஆநொம்த அனந்த தொம் தொம்த நம் நம் தொம்த ஆநம்தொம்த' போன்ற ஆலங்கார இசைச் சொற்கட்டுக்களினால் இராக பாவம் சொட்டும்படி வாசிக்கப்படுவதாகும். பாடும் போது மிகவும் ரம்மியமாய் இருக்கும் தீக் ஷனா மேடைக்கு இலக்கணமானார். கண்ட திரிபுடை தாளப் பல்லவியின் பிரதமாங்கம் திவிதியாங்கம் பதகர்ப்பம் அருமையாக அமைந்தன. வீணையும் தபேலாவும் பல்லவியை லாவகமாக அலங்கரித்து பேறுகொண்டன.

இதைத் தொடர்ந்து அமிர்தவர்ஷினி மாண்டு இராக உருப்படிகளும் ஸ்ரீஇராக தில்லானாவும் ரேவதி இராக சந்ததாள திருப்புகழும் சபைக்கு விருந்தாகின. பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் சின்னவயதிலே என்ற உருப்படியானது அனைவரையும் வாரியணைத்து மெய்சிலிர்க்க வைத்தது. சிறப்பாக யாழ் மாவட்ட நீதிபதி, முன்னாள் துணைவேந்தர், மதிப்பார்ந்த கலைஞர்கள், விருந்தினர்கள், ரசிகப் பெருமக்கள், குருவானவர்கள், பெற்றோர் ஏற்றி வைத்த மங்கல தீபங்கள் அரங்கேற்ற நாயக நாயகி இருவரையும் கலையொளிபெற வைத்ததெனலாம். அவை ஒளி விளக்குகள் பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வரலாறு காண்பியக்கலைஞர் இருக்கைப் பேராசிரியர் கலாநிதி தாமோதரம்பிள்ளை சனாதனனின் பிரதமவிருந்தினர் உரையானது, காலம் கருதியகருத்துகளை எல்லோரும் ஏற்கத்தக்க வகையில், கலை என்பது பாடசாலை, பல்கலைக்கழகம், பரீட்சைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையான இன்ப வாழ்வைக் கொண்டதென அழகாக எடுத்தியம்பினார். அவரது உரை பிரம்மாதம்.

மதிப்பீட்டுரையை பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், உள்ளதை உள்ளவாறு, வல்லமைகளை வாயார வாழ்த்தி, நல்லதோர் ஊக்கமதை நாவில் சரஸ்வதி நின்று ஏய உணர்விப்பதுபோல் பொழிந்து பேரின்பமதை எல்லோர்க்கும் சொந்தமாக்கினார். சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபரின் உரை, வார்த்தைக்கு வார்த்தை அற்புதமானவை. ஒலி அமைப்பு பலே!. மிக நன்று. உபசரிப்பு வரவேற்பு அருமை. கையேடு அடேயப்பா! பயனுள்ள கட்டுரைகள் பொதிந்த பேரேடு! வெல்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல் துறை



# கலைத்துறை மாணவர்களுக்கு கதவடைக்கும் பல்கலைக்கழக கற்கைநெறிகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**கலைத்துறை பல்கலைக்கழக அனுமதியில் மாற்றங்கள்**

கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கத்தக்கதாகவிருந்த 11 கற்கைநெறிகளின் அனுமதித் தேவைப்பாடுகளுக்குள் மிக விசேடமான மாற்றங்கள் கடந்த மூன்று வருடங்களுக்குள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 2023/2024 கல்வியாண்டு தொடக்கம் இக் கற்கைநெறிகளுக்கு கலைத்துறை மாணவர்கள் முற்றாக விண்ணப்பிக்க முடியாத வகையிலும் அல்லது மிகவும் அரிதான சந்தர்ப்பங்கள் உள்ள நிலையிலும் அனுமதித் தேவைப்பாடுகள் குறுக்கப்பட்டுள்ளன. பிரதானமாக நான்கு அடிப்படைகளில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. முற்றாக விண்ணப்பிக்க மறுக்கப்பட்ட கற்கைநெறிகள் - 3
2. க.பொ.த. உயர்தர பாடச்சேர்மானத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கொண்டிருந்தால் விண்ணப்பிக்க கூடிய கற்கைநெறிகள் - 3
3. கலைத்துறையில் குறிக்கப்பட்ட சில பாடச்சேர்மானங்களைக் கொண்டிருத்தல் - 2
4. ஏனைய துறைகளின் பிரதான பாடங்களில் ஒன்றைக் கற்றிருத்தல் - 3

மேற்குறித்த மாற்றங்கள் குறித்த விடயங்கள் தொடர்பான விரிவான விவரங்களை கற்கைநெறிகள் மற்றும் அவற்றை வழங்கும் பல்கலைக்கழகங்கள் அனுமதிகளின் எண்ணிக்கையில் ஆராயலாம். பின்வரும் கற்கைநெறிகளுக்கு கலைத்துறை மாணவர்கள் முற்றாக விண்ணப்பிக்க முடியாதவகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. தொழில்முயற்சியும் முகாமைத்துவமும்
2. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமை
3. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்

இவற்றுள் முதலிரு கற்கைநெறிகளும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்றன. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் இந்தக் கற்கைநெறிகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் கற்கைநெறிக்கு 101 அனுமதிகளும் விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமை கற்கைநெறிக்கு 107 அனுமதிகளும் கடந்த ஆண்டு வரை வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இந்தக் கற்கைநெறிகளுக்கு ஒரு மாணவர் விண்ணப்பிப்பதாயின் அவர் கலைத்துறையைத் தவிர்த்து பௌதிக விஞ்ஞானம்,உயிரியல் விஞ்ஞானம் அல்லது வர்த்தகத் துறையில் கல்வி கற்றிருக்க வேண்டும் என அனுமதித் தேவைப்பாடு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இது வெளிப்படையாகவே கலைத்துறை மாணவர்களுக்கு முற்றாகக் கதவடைப்புச் செய்யும் ஏற்பாடாகும்.
அத்துடன் களனிப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினால் வழங்கப்படும் 75 மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் எனும் கற்கைநெறி முன்னர் கலைத்துறை மாணவர்களையே அதிகம் இலக்கு வைப்பதாகவிருந்தது. குறிப்பாக பிரதான தேசிய மொழிகளைக் கற்கும் மாணவர்கள் அத்துறையில் அனுமதி பெறும் வாய்ப்பைக் கொண்டிருந்தனர். இருந்தும் 2023/2024 கல்வியாண்டு தொடக்கம் உயிரியல் துறையில் கல்வி கற்ற மாணவர்களுக்கே இவ்வாய்ப்பு வழங்கப்பட வுள்ளது. அடுத்து கலைத்துறை மாணவர்கள் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவேண்டுமானால் அவர்கள் தமது 3 பாடங்களுள் ஒன்றாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தை கொண்டிருக்கவேண்டும் எனும் நிபந்தனை இருக்கத்தக்க வகையில் பின்வரும் கற்கைநெறிகளின் அனுமதித் தகைமைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
2. தகவல் முறைமைகள்
3. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்

கலைத்துறை மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப் பாடத்தை தமது உயர்தரப் பாடச் சேர்மானங்களுக்குள் கொண்டிருப்பது தற்போது மெதுமெதுவாக அதிகரித்துவருகின்றது. மேற்குறித்த கற்கைநெறிகளைப் பயில தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் அடிப்படை அறிவு அவசியம் எனும் பின்னணியில் இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கருதலாம். கலைத்துறையில் கற்கக்கூடியதாகவுள்ள பாடங்களின் அடிப்படையில் பரந்தளவில் வழங்கப்பட்ட பாடச் சேர்மானங்களின் அனுமதி என்பது பின்வரும் கற்கைநெறிகளுக்கு குறுக்கப்பட்டு விசேடமாக ஒன்று அல்லது இரண்டு பாடங்கள் மட்டும் அனுமதித் தேவைப்பாடாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

1. செயற்றிட்ட முகாமைத்துவம்
2. மொழிபெயர்ப்புக் கற்கைகள்

வவுனியாப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் செயற்றிட்ட முகாமைத்துவம் எனும் கற்கைநெறிக்கு வருடம் தோறும் 138 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். முன்னர் எந்த விதமான பாடச்சேர்மான விதிமுறைகளும் அற்று க.பொ.த. உயர்தரத்தில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்திருக்கும் மாணவர் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க கூடியதாகவிருந்தது. ஆனால் 2023/2024 கல்வியாண்டு தொடக்கம் குறித்த இரு பாடங்களை கற்றிருக்கவேண்டும் எனும் அவசிய நிபந்தனை அமுல்படுத்தப்படவுள்ளது. அதன் பிரகாரம் கலைத்துறையில் புவியியல், பொருளியல் பாடங்கள் மட்டும் இந்தப் பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழத்தினால் வழங்கப்படும் மொழிபெயர்ப்புக் கற்கைகளுக்கான அனுமதித் தேவைகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கல்வியாண்டு 2023/2024 தொடக்கம் மொழிபெயர்ப்புக் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கவிரும்பும் மாணவர்கள் உயர்தரத்தில் தமிழ் அல்லது சிங்களத்தைக் கற்றிருக்க வேண்டும் என நிபந்தனை மிகக் குறுக்கப்பட்டுள்ளது. 138 அனுமதிகளை இந்தக் கற்கைநெறி கொண்டுள்ளது.
அடுத்த பிரதான மாற்றமாக, கீழ்குறிப்பிடப்படும் கற்கைநெறிகளுக்கு கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் ஆகக் குறைந்தது ஒரு பாடத்தையேனும் பௌதிக விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானம் அல்லது வர்த்தகத்துறையின் பிரதான பாடங்களுள் இருந்து கற்று இருக்கவேண்டும் எனும் அடிப்படையில் அனுமதித் தேவைப்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன.

1. நீதிப் பொறியியல்
2. பட்டினமும் நாடும் திட்டமிடல்
3. கணக்கிடலும் முகாமைத்துவமும்

இருந்தும் மேற்குறிப்பிடப்பட்ட பாடத்தெரிவு தொடர்பான நிபந்தனையைக் கலைத்துறை மாணவர்கள் பூர்த்தி செய்வது என்பது சாத்தியமற்றது என்பது யதார்த்தமான விடயம். எனவே இந்தத் துறைகளும் கருதுகோள் அளவில் முற்றாக கலைத்துறை மாணவர் அனுமதியைத் தவிர்த்த துறைகளாகவே கொள்ளப்படவேண்டும். இந்தத் துறைகள் மூன்றும் 254 அனுமதிகளைக் கொண்டுள்ளன.

**கலைத்துறை மாணவர்களை கட்டுப்படுத்தும் காரணங்கள்**

இந்தக் கட்டுரையின் முன்னைய பகுதியில் அனுமதித் தேவைப்பாடுகள் மாற்றப்பட்டமை தொடர்பாக குறித்த கற்கைநெறிகளை வழங்கும் யாழ்ப்பாணம், ஊவா வெல்லஸ்ஸ மற்றும் வவுனியாப் பல்கலைக்கழகங்களின் துறைகளில் பணியாற்றும் கல்விசாரா ஆளணியினருடான கலந்துரையாடியபோது பின்வரும் விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

1. கலைத்துறையில் இருந்து இந்தக் கற்கைநெறிகளுக்கு அனுமதிபெறும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் குறித்த கற்கைநெறிகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான அடிப்படை அறிவைக் கொண்டிருக்கவில்லை.
2. கற்கைநெறியில் அடிப்படை அறிவில்லாமையால் கற்றலில் இடர்படுவதுடன் மனஅழுத்தங்களுக்கும் உள்ளாகின்றனர். சிலர் பல்கலைக்கழகக் கல்வியிலிருந்து இடைவிலகும் தன்மையும் காணப்படுகின்றது.
3. ஒப்பீட்டளவில் கலைத்துறை மாணவர்கள் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் இசட் புள்ளிகள் ஏனைய துறை மாணவர்களைவிட அதிகமாகவுள்ளது. இதனால் குறித்த கற்கைநெறிகளில் கலைத்துறை மாணவர்களின் செறிவு அதிகரிக்கும்போது மேற்குறிப்பிடப்பட்ட 1 மற்றும் 2 நிலைமைகளினால் குறித்த மாணவர்களுள் அனேகமானோர் இடர்படுகின்றனர். இதனால் குறித்த கற்கைநெறியின் தரம் பாதிக்கப்படுகின்றது.
4. அத்துடன் கலைத்துறையில் உயர் இசட் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தொழில்வாய்ப்பை மையப்படுத்தி இக் கற்கைநெறிகளுக்கு வருகின்றனர். ஆனால் கற்கைநெறியில் சிறப்பாகச் செயற்பட முடியாது போகின்றபோது அவர்களின் எதிர்காலம் பாதிப்படைகிறது. ஆனால் அவர்கள் தமக்குரிய கலைத்துறை கற்கைகளுக்கு அனுமதி பெற்றிருந்தால் அத்துறைகளில் மீதிறனான மாணவர்காளக இருந்திருப்பார்கள்.
5. கற்கைநெறியை பூர்த்தி செய்தாலும் வேலைவாய்ப்புள்ள துறைகள் கணித, விஞ்ஞானத்துறையுடன் தொடர்புற்று இருப்பதால் பலர் உரிய துறைகளில் வேலைகளைப் பெறாது வேறு மார்க்கங்களை நாடுகின்றனர். இது உரிய கற்கைநெறிகள் வழங்கவேண்டிய தேசியப் பங்களிப்பை குறைக்கின்றன.
6. மொழிபெயர்ப்புக் கற்கைகளைப் பொறுத்தவரையில் மொழிசார் இலக்கணங்கள் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளன. இதனால் உயர்தரத்தில் மொழிப் பாடங்களைக் கற்காத மாணவர்கள் பல்கலைக்கழக கற்றலில் இடர்படுவதுடன் கற்றலின் நிறைவில் வேறு துறைசார் பரப்புகளில் தமது தொழிலைத் தேடுகின்றனர். இது சவாலான விடயமாகவுள்ளது.
7. கலைத்துறை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் எனும் அரசின் கல்விக் கொள்கையை வலுப்படுத்த மாணவர்களைத் திசைமுகப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய செயற்பாடுகளுக்கு இத்தகைய முடிவுகள் வலுச்சேர்க்கும்.
8. கற்கைநெறிகள் சிலவற்றுக்கு உளச்சார்புப் பரீட்சை அவசியமாகின்றது. உளச்சார்பு பரீட்சைகள் அனைத்தும் ஆங்கிலமொழி மூலமாகவே நடத்தப்படுகின்றன. இந்தப் பரீட்சையிலும் விண்ணப்பிக்கும் கணிசமானளவு கலைத்துறை மாணவர்கள் சிறப்பாகச் செயற்படுவதில்லை. இதனால் உளச்சார்புப் பரீட்சைகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்களைத் தேவையற்ற விதத்தில் இணைத்து நிர்வாக மற்றும் செயற்பாட்டு நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

**நிறைவுரை**

கற்கைநெறிகளுக்கான அனுமதித் தேவைப்பாடுகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் எனப்படுபவை கலைத்துறையை முற்றாகத் தவிர்ப்பது, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத் தெரிவை அவசியமாக்குவது, கலைத்துறையின் பொருளியல் மற்றும் புவியியல் உள்ளிட்ட சமூக விஞ்ஞானத்துறை பாடங்களின் தெரிவை முதன்மைப்படுத்துவது மற்றும் தமிழ் சிங்களம் ஆகிய பாடங்களை அவசியமாக்குவது, ஏனைய துறைகளில் இருந்து பாடங்களை உயர்தரத்தில் கற்க நிபந்தனைப்படுத்துவது எனும் அடிப்படைகளில் செய்யப்பட்டுள்ளன. பிரதானமாக இந்தக் கற்கைநெறிகளில் கலைத்துறை மாணவர்களின் செறிவைக் குறைப்பதற்கான உத்தியாகவே இந்த மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இது கலைத்துறையைக் கற்கும் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிவாய்ப்புகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் வகையில் அமைகின்றது. கற்கைநெறிகளில் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படும்போது கலைத்துறைக்கான நேரடி அனுமதியில் போட்டித் தன்மை மேலும் அதிகரிக்கும்.
இது தொடர்பாக மாணவர்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு செய்யப்படவேண்டும். கலைத்துறையை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உரிய வகையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான பொறிமுறைகளை வகுக்கவேண்டும். அத்துடன் கலைத்துறையைத் தெரிவுசெய்யும்போது பாடத்தெரிவுகளில் அதிகம் கவனம் எடுக்க வேண்டிய அவசியம் குறித்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் தெளிவுபடுத்தப்படவேண்டும். இதன்மூலம் கலைத்துறை மாணவர்கள் எதிர்காலத்தில் எதிர்கொள்ளவுள்ள பல சவால்களை முகாமைசெய்ய உதவக்கூடியதாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சவுந்து



# அன்றைய தியாகங்களுக்காக இன்று ஒன்றுபடுவோம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்பது இன்றைய இலங்கையின் அரசியல் நிலைவரத்துக்கு அவசியமான ஒன்றாகும். இதை அரசியல் சித்தாந்தம் தெரிந்தவர்கள் முதல் தெரியாத அடிதட்டு மக்கள் வரை அனைவரும் உளமார புரிந்துகொள்ள வேண்டும். இதில் கட்சிகள், கட்சிப் பேதங்கள், முரண்பாடுகள் யாவற்றையும் தற்காலிகமாக மூடை கட்டி வைக்கவேண்டும். மதங்கள் யாவும் தமது மதரீதியான முரண்பாடுகள், குரோதங்கள், வன்மங்களை உடனடியாகக் களைந்து ஒற்றுமையுணர்வு மேலோங்க வேண்டும்.

அழுத்தக்குழுக்களாக செயற்படும் பொதுஅமைப்புகள் உண்மையான உளச்சுத்தியுடன் கட்சிகள், மக்கள் சமூகங்களை ஒன்றிணைத்தல் வேண்டும். மக்களுக்கு ஏன் இன்றைய சூழலில் தமிழ் வேட்பாளர் தேவை என்பதை சரியான முறையில் புரியவைக்கவேண்டும். இது கட்சிகள் மதங்கள் சமூக அமைப்புகள் கடந்து, இந்த ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்யவேண்டும். இதை நாம் இதுவரை காலமும் போரில் மரணித்த உறவுகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், சிறையில் வாடும் எம் சகோதர உறவுகளுக்காக ஒன்றிணைந்து செயற்படுத்த வேண்டும்.

வடக்கு -கிழக்கு, மலையகம், தமிழ் மக்கள் யாவரும் ஒன்றிணைந்து தமிழருக்கான காத்திரமான அரசியல் இருப்பை இதன் மூலம் உலகறியச் செய்தல் வேண்டும். தமிழர்கள் ஆகிய நாம் எமது நிலம், உழைப்புக்கு உரிய ஊதியம், அரசியலில் எமக்கான சமவாய்ப்பு மதரீதியான வழிபாட்டு அடக்குமுறைகளில் மீண்டெழுவது கல்வியில் அரசபொறிமுறைகளில் சமவாய்ப்பைப் பெற நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும். இதன்மூலம் இந்த ஜனநாயக உலகுக்கு ஆயுதரீதியாக மௌனித்த எம் இறையாண்மை, அபிலாஷைகள், உரிமைகளை நாம் அகிம்சை வழியில் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு மீண்டெழுவதை உலகுக்கு அறிவிக்க வேண்டும்.



உலக மொழிகளில் மிகவும் தொன்மையானது நமது தமிழ்மொழி. இதற்கு வலுச்சேர்ப்பது தமிழகத்தின் 'கீழடி'. 'கீழடியில் மிகச் சிறந்த கட்டமைப்புடன் ஒரு நாகரிகம் தோண்டியெடுக்கப்பட்டது. கீழடியின் நாகரிகம் உலக ஆராய்ச்சியாளர்களையே வியக்கவைக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் உரையாற்றும் போது, இந்தியப் பிரதமர் மோடி உலகின் தொன்மையான மொழி தமிழ்மொழி என்பதில் பெருமை கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

உலகம் சிந்திக்கத் தொடங்கும் முன்பே அறிவிற் சிறந்திருந்தது எமது தமிழ் இனம். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு உலகத்தையே வழிநடத்தும் மிகப் பெரும் பேரரசாக விளங்கியுள்ளது. 20 இலட்சம் போர் வீரர்கள், 65 ஆயிரம் யானைகளைக் கொண்ட யானைப் படை, 2 இலட்சம் குதிரைகள் கொண்ட குதிரைப் படை இருந்துள்ளது. இத்தகைய பெரும் படையை வைத்து தென்கிழக்கு ஆசியா முழுவதும் சோழர்கள் இராஜ்ஜியமாக இருந்துள்ளது. ஆனால் இன்றோ தமிழினத்தின் போக்கு எத்தகையது...?

மிருகங்களின் இயல்பறிந்து போரில் ஈடுபடுத்தும் விலங்கியல் அறிவு, இந்தப் படைக்கு உணவளிக்கும் விவசாய அறிவு மற்றும் நீர்மேலாண்மை மனித வளத்தைக் கருத்துமோதல் இன்றி கட்டுக்கோப்புடன் நிர்வகிக்கும் நிபுணத்துவம், மக்களின் வாழ்வியல், பொருளாதாரத்தை நிர்வகிக்கும் திறன் கலைத்துறை தொடக்கம் கணிதத்துறை வரையான அறிவியல் உச்சமாக இருந்துள்ளார்கள். தமிழர்கள் வரலாற்றிலே சோழர் காலத்தை 'பொற்காலம்' என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதேபோல சோழர்களின் மும்மண்டலத்தில் ஈழ மண்டலம் மீண்டும் அவ்வாறான 'பொற்காலத்தை' கண்ணுற்றது. ஆனால் ஏனோ தெரியவில்லை இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் கூறவோ அல்லது பதிவு செய்யவோ முற்படவில்லை. முள்ளிவாய்க்கால் அழிவுக்கு இதுவரை நீதி வழங்காத சர்வதேச ஜனநாயகம், இன்று 'காஸா' மக்களுக்கு கோர அழிவுக்குப் பின்பு நீலிக் கண்ணீருடன் ஆதரவையும் அரவணைப்பையும் வழங்க அடியெடுத்து வைத்துள்ளது. எமக்கான நீதி உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் மௌனித்த பின்பு நாம் மீண்டெழுவதற்கான அடுத்த கட்ட அத்திபாரமாக தமிழ் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்த வேண்டும். அதற்கு இன்றைய ஜனநாயக சர்வதேசமும் எமக்கு நேசக்கரம் நீட்டி எமது ஜனாதிபதி வேட்பாளரை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

**காலம்காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் எம்மை ஏமாற்றி விட்டார்கள் என்று கூறும் தமிழ் அரசியல் வாதிகளைப் புறந்தள்ளி இலங்கை வாழ் அனைத்து (வடக்கு, கிழக்கு, மலையகம்) தமிழ் மக்களும் ஒன்றிணைவோம்.**

எமது தமிழ்ச் சமூகம் விட்ட பெரிய தவறு. இலங்கை சுதந்திரம் பெற்றகாலம் முதல் இன்றுவரை தமிழ் அரசியல்வாதிகளை நம்பி எமது சந்ததியினரின் வாழ்நாளை வீழ்நாள் ஆக்கிவிட்டோம். அந்தத் தவறு இனியும் நேரக்கூடாது, தொடரக்கூடாது என்பதே. அதேபோல புலம்பெயர் தமிழர்களும் அமைதியாக இந்த முயற்சிக்கு ஒன்றுபடவேண்டும். இது கட்சிகளைக் கடந்து மக்கள் மயப்பட்ட தெரிவே தமிழ் ஜனாதிபதி பொதுவேட்பாளர் ஆகும். பல வாழ்வியல் பெருமைகளையும் 30 வருடப் போரில் தியாகிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உடல் அவயவங்களை இழந்த வேதனையோடு வாழும் உறவுகளுக்காகவும் ஒற்றுமை உணர்வு மேலோங்க ஒன்றுபடுவோம்.

ஐரோப்பியரின் வருகைக்கு முன் தமிழர்கள் தங்கள் பாரம்பரிய பூமியில் முடியுடைய தமிழ் மன்னர்கள் ஆட்சியில் இறைமையோடு வாழ்ந்தார்கள். எனவே நாம் அனைவரும் ஒற்றுமையுடன் கட்சிகளைக் கடந்து ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை மிக விரைவாக தெரிவு செய்வோம். ஒரு தமிழ்த் தாயின் 'சொத்தும்' சிதறாது ஒன்றுபட்டு வாக்களித்து எமது தமிழ் ஜனாதிபதி வேட்பாளரை தாயகத்தில் வெற்றிபெற வைப்போம்.

காலம்காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகளைப் புறந்தள்ளி இலங்கை வாழ் அனைத்து (வடக்கு, கிழக்கு, மலையகம்) தமிழ் மக்களும் ஒன்றிணைவோம். சிங்கள ஆட்சியாளர்களைவிட தமிழ் அரசியல்வாதிகளே எமக்கு 'சீழ்' பிடித்த புண்ணாக இருப்பார்கள். எல்லாவற்றையும் அற்பத்தனமாக திரை மறைவில் பெற்றுவிட்டு சிங்கள ஆட்சியாளர்களை நம்பி ஏமாந்துவிட்டோம் என ஒவ்வொரு தேர்தல் நேரமும் 'ஒப்பாரி' பாடி இதுவரை காலமும் காலத்தையோட்டிய தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சேர்த்து தக்க பதிலடியை நாம் அனைவரும் ஒன்றுபட்டு (வடக்கு, கிழக்கு, மலையகம்) தமிழ் ஜனாதிபதி வேட்பாளரை கட்சிகள் கடந்து மதங்களைக் கடந்து தெரிவுசெய்வோம் பயணிப்போம்...




புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555

puthanpoikaiuthayan@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனையும், வர்ணிப்பும் இழையோடும் இலக்கியப் பாடல்கள்

இராமபுரத்தூர் நிஷாந்தன்

இலக்கியம் என்பது இதயத்தின் இதமான தேடல், இன்பம் தரும் இனிய தேன் கூடு, இரசனை ஊட்டும் அமுத கலசம், காயம் பட்ட மனதினை வருடிடும் அரு மருந்து, அன்பினை போதிக்கும் அட்சயபாத்திரம், அடடா, இப்படி இலக்கியம் குறித்த சொல்லாடல் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இரசிக்கத் தக்க மனம் படைத்த யாவரும் இதை இலகுவில் புரிந்து கொள்வர். நம் இலக்கியங்கள் எல்லாம் படித்து இன்புறுவதற்குத் துணையாகின்றன. ஒவ்வொரு இலக்கியப் பாடல்களிலும் பாடப்பட்டுள்ள கற்பனை வளம், வர்ணிப்பின் இயல்பு, அணிகளின் பயில்பு, சொல்லாட்சியின் ஆளுமை முதலிய அம்சங்கள் இலக்கிய ஆர்வலர்களின் உள்ளத்தில் நிறைந்திருக்கச் செய்கின்றன. இப்போது நாம் நம் இலக்கியப் பாடல்களில் நம் கற்பனைக்கு எட்டாத வகையில் அதீத கற்பனையும், உயரிய வர்ணிப்பும், ஆழமான இலக்கிய நயத்தலும் கொண்டு படைக்கப்பட்டுள்ள சில பாடல்களை காண்போம் வாருங்கள்.



### பறந்தது வண்டோ அல்லது பழமோ?

தேனை அருந்தும் இயல்புடைய வண்டு ஒன்று நன்றாகத் தேனை அருந்தி விட்டு மயங்கிக் கிடக்கின்றது. அப்போது பார்ப்பதற்கு அது நாவல் பழம் போல் காட்சியளிக்கின்றது. அச்சமயம் அவ் வழியில் ஓர் அழகு படைத்த பெண் ஒருத்தி வருகின்றாள். மயங்கிக் கிடந்த வண்டினை உண்மையில் நாவல் பழம் எனக் கருதி தன் நீண்ட மலர் போன்ற கரங்களில் எடுத்து முகத்தின் முன் வைத்துப் பார்த்தாள். அப்போது கொஞ்சம் மயக்கம் நீங்கிய வண்டு கண்களை விழித்துப் பார்க்கின்றது. அதற்கு ஆச்சரியமாயிற்று, வானத்தில் நிலா தோன்றி விட்டது, அப்படியெனில் தான் இருக்கும் தாமரை மலரானது குவிந்துவிடும். இதனால் அதற்குள் அகப்பட்டுத் தான் இறந்து விடுவேன் என அச்சப்பட்டு அவ் வண்டு பறந்து போனது. இதைக் கண்ட அந்தப் பெண்ணிற்கோ ஆச்சரியம். இது என்ன புதுமையாக உள்ளது, பறந்தது வண்டோ? அல்லது பழம் தானே? என வியப்புடன் கூறி நிற்கின்றாள். பாடல் இது தான்.

*தேன் நுகர் வண்டு மது தனை உண்டு*
*தி(ம)யங்கியே கிடந்ததைக் கண்டு*
*தான் அதைச் சம்புவின் கனி என்*
*தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்*
*வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி*
*மலர்க் கரம் குவியும் என்று அஞ்சி*
*போனது வண்டோ பறந்ததோ பழம் தான்*
*புதுமையோ இது எனப் புகன்றாள்*

ஆகா, என்னவொரு கற்பனையான வர்ணிப்பு. தேனை அருந்தி மயங்கிக் கிடந்த வண்டினை நாவல் பழம் என்கின்றார் கவிஞர்.

இது தவிர பெண்ணின் முகத்தை சந்திரன் என்று வண்டு எண்ணியதும், தான் இருக்கின்ற பெண்ணின் கைகளை தாமரை மலர் எனக் கருதியதும் பின் வானில் சந்திரன் வந்துவிட்டால் தாமரை மலர் குவிந்து கொள்ளும் என்பதை அறிந்த வண்டு, தன் முன் உள்ள பெண்ணின் முகத்தை சந்திரன் எனக் கருதி, தான் இருக்கும் பெண்ணின் கரங்கள் தாமரை மலர் என எண்ணி அந்தத் தாமரை மலர் குவிந்து கொண்டால் தான் அதற்குள் அகப்பட்டு இறந்து விடுவேன் என அச்சம் கொண்டு பறந்து சென்றது என அழகிய கருத்தாடல் காட்டுகின்றது. ஆகா, அருமையான கற்பனையாற்றல்.

### நிலவா? அல்லது தோகை மயிலா?

இதுவும் விவேகசிந்தாமணி இலக்கியம் தந்த பாடலே. மிகவும் உயர்ந்த அரண்மனை மேல் மாடம் ஒன்றில் அழகிய பெண் ஒருத்தி உலாவுகின்றாள். அவளது அழகிய முகத்தைக் கண்ட இராகு எனும் பாம்பு முழு நிலவு என்று எண்ணி அந்தப் பெண்ணை நெருங்கி வந்தது. அப்போது அதைக் கண்ணுற்ற பாகினைப் போன்ற மொழிகளைப் பேசுகின்ற அந்த மங்கை அச்சப்பட்டு ஓடிச் சென்றாள். இதைக் கண்ட இராகு தோகை மயில் ஓடிச் செல்கின்றது என எண்ணித் திரும்பிச் சென்றதாம். அந்த நயமான பாடல் இது தான். மாகமாமேடை மீதில் மங்கை நின்று உலாவக் கண்டு ஏகமா மதி என்று எண்ணி இராகு வந்துற்ற போது பாகு சேர் மொழியினாளும் பற்றியே பாதம் வாங்க தோகை மா மயில் என்று எண்ணித் தொடந்து அரா மீண்டதன்றே படிக்கும் போது நயமூட்டும் பாடலல்லவா? மங்கையின் முகத்தை நிலவெனவும், அவளது உடல் வனப்பினை அதாவது சாயலை மயில் எனவும் கூறி வர்ணிப்பினை ஊட்டியுள்ள கவிஞரின் நயம் வியக்கத்தக்கதே.

### பூவையின் முகம் தாமரை.

நளவெண்பாவில் புகழேந்திப் புலவர் காட்டும் பாடல் இது. நளனும், தமயந்தியும் திருமணம் முடித்து வீதியுலா செல்கின்றனர். அப்போது நளன் செல்லும் வழியில் புலப்படும் இயற்கைக் காட்சிகளையெல்லாம் காண்பித்தவாறு செல்கின்றான். அப்போது ஒரு மலர்ச் சோலையில் ஓர் அழகிய பெண் ஒருத்தி மலர்களைப் பறிக்கின்றாள். அப்போது அழகிய அவளது முகத்தை தாமரை என்று எண்ணிக் கொண்டு தேன் குடிக்கும் ஆவலில் வண்டுகள் எல்லாம் மொய்க்க வருகின்றன. இதைக் கண்டு அப்பெண் தன் கைகள் கொண்டு வண்டுகளைத் தடுக்கின்றாள், அப்போதும் அந்த வண்டுகள் போகாமல் அவள் கைகளையும் காந்தள் மலர்கள் எனக் கருதி அவளது கைகளையும் மொய்க்க முற்படுவதைக் கண்டு அப்பெண் அச்சத்தால் நடுங்கி நிற்கின்ற காட்சியைக் காணும்படி நளன் தமயந்திக்கு காண்பிக்கின்றான்.

*மங்கை ஒருத்தி மலர்க் கொய்*
*வான் வான் முகத்தை*
*பங்கயம் என்று எண்ணிய படி*
*வண்டை செங்கையால்*
*காத்தாளக் கைம் மலரைக்*
*காந்தளெனப் பாய்தலுமே*
*வேத்தாளைக் காண் என்றால்*
*வேத்து.*

ஆகா, மலர்களில் தேன் பருகும் இயல்புடையன வண்டுகள். ஆகவேதான் பெண்ணின் முகத்தை தாமரை மலர் எனக் கருதி அதில் தேன் குடிக்கும் ஆவலில் அவை அவளது முகத்தை மொய்க்க முற்பட்டனவாம். ஆக அப் பெண்ணின் முகத்தை தாமரைபோல மென்மையும், அழகும் கொண்டது என்பதும், அந்தப் பெண்ணின் கைகளை காந்தள் மலர்கள் எனக் கருதி மேலும் வண்டுகள் அவள் கைகளையும் மொய்க்க முற்பட்டன என்பதனால் அவள் கைகள் காந்தள் மலர் போல் மென்மை உடையது எனவும் கவிஞர் வர்ணிப்பில் உச்சம் தொடுகின்றார்;.

### வஞ்ச மகள் வந்தாள்

கம்பரின் பாடல்கள் என்றாலே கவி நயமும், கற்பனை வளமும் நிறைந்திருக்குமே, அத்தகு பாடல்களில் ஒன்றே இந்தப் பாடலும். இராமனை அடைய வேண்டும் எனும் விருப்பத்தில் இராவணன் தங்கையான சூர்ப்பனகை தன் அசுரக் கோலம் மறைத்து அழகிய மானிடப் பெண்ணின் தோற்றம் தரித்து இராமனை நோக்கி நடந்து வருகின்றாள். எப்படி நடந்து வருகின்றாள், அவள் நடையழகை காட்டுகின்றார் கம்பர் பாருங்கள்.

*பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,*
*செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,*
*அம் சொல் இள மஞ்ஞை என,*
*அன்னம் என, மின்னும்*
*வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்*

அவளது பாதம் அது, பஞ்சு போன்று மென்மையானது. எந்த அளவுக்கு மென்மையானது தெரியுமா? கொடியின் தளிர் அவள் பாதத்தைப் பார்த்தால் வருத்தப்படுமாம். இன்னும் சொல்கிறார் கம்பர். செக்கச் சிவந்த தாமரை மலர் போன்று இருக்கிறதாம் அவள் பாதம். அப்படிப்பட்ட பாதங்களால் அடியெடுத்து வைத்து நடந்து வருகிறாள். எப்படி நடக்கிறாள்? சீராக அடி வைத்து, மெல்லமெல்ல அடிவைத்து, மயில் போல, அன்னம்போல நடக்கிறாள். அப்படி அவள் நடக்கும் போது, மின்னுகின்ற வஞ்சிக் கொடிபோல அழகாகக் காட்சியளிக்கிறாள். இப்படியெல்லாம் அழகாக நடந்து வரும் அவள் எப்படிப் பட்டவள் தெரியுமா? முழுக்க முழுக்க நஞ்சு (விஷம்) ஆனவள். மனம் முழுக்க வஞ்சனையுடையவள். ஆகவே தான் வஞ்சமகள் வந்தாள் என்றார் கம்பர். இன்னொரு தடவை பாடலை படித்துப் பாருங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# யாழ்ப்பாணம் மாநகர சபை
# சபை நிதி (CF) 2024 & முத்திரைத் தீர்வை (SD) 2021 & 2022

01. யாழ்ப்பாணம் மாநகரசபை பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை இல. 04/2016(i), 04/2016(ii) & 04/2016 (iii) என்பனவற்றிற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule/ Bidding data) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 221 6468, 021 222 2019)** என்னும் முகவரியிலிருந்து **29.05.2024 ஆம் திகதியில் இருந்து 18.06.2024 ஆம்** திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**3,500.00** மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) **தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **19.06.2024 ஆம் திகதி மு.ப. 10:00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் **06.06.2024 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.30** மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வேலைத் தலங்களுக்கான களத்தரிசிப்பு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற்) | நிதி | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/CF/Package I /2024- 28 | Constrcution of Safety wall for Pandara kulam (Part)<br>Improvement of Ramanathan Road (Balance work)<br>Improvement of Mooththavinayagar Veethy (Balance) and Repair of culvert guard wall at the end of road. | 2.410 | CF | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 25,000.00 | 17.09.2024 |
| 2 | JMC/WD/CF/Package II/ 2024-29 | Improvement of Sivagurunathar lane<br>Improvement of Kovil Road and drainage cover slab<br>Improvement of Kannakai Amman Road (Part) | 4.237 | CF | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 43,000.00 | 17.09.2024 |
| 3 | JMC/WD/CF/Package III/ 2024-30 | Renovation of Paal kulam channel<br>Constrcution of Drainage at St. Antony's Road. | 2.369 | CF | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 24,000.00 | 17.09.2024 |
| 4 | JMC/WD/CF / Package IV/ 2024 - 31 | Improvement of Kaladdy pillayar lane & Kaladdy pillayar lane 1st by lane<br>Improvement of Araly Road 1st cross road (part)<br>Improvement of Jemma Street<br>Renovation of Drainage at Yarl Veethy and palaly road 2nd lane | 7.910 | CF | 77 | 03.09.2024 | 84 | C7 & C6 | 80,000.00 | 01.10.2024 |
| 5 | JMC/WD/CF/Package V /2024 - 34 | Renovation of Draiange of Devarikulam<br>Renovation of Draiange at sivanpannai veethy balance work<br>Repairs of 2 drainages at New housing scheme (Beski) | 4.425 | CF | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 45,000.00 | 17.09.2024 |
| 6 | JMC/WD/CF/ Package VI /2024 - 35 | Improvement of Nayanmar Road (Balance Work)& Repair of culvert guard wall (road end) and Improve ment of Aththiyady Road (Balance work) | 2.200 | CF | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 22,000.00 | 17.09.2024 |
| 7 | JMC/WD/CF/Plaikaniyamutham /2024-38 | Construction of Pre school class room at Pillikaniyamutham | 3.210 | CF | 63 | 20.08.2024 | 84 | C8& C7 | 33,000.00 | 17.09.2024 |
| 8 | JMC/WD/CF/Drainage for Vipulan-antha/2024-39 | Construction of Drainage For Vipulananda Road to Pungankulam Ilanthakulam Connection Drainage | 2.885 | CF | 63 | 20.08.2024 | 84 | C8& C7 | 29,000.00 | 17.09.2024 |
| 9 | JMC/WD/CF/Hospital Road Culvert 2024-40 | Reconstruction of culvert Hospital Road (Near the Singala Magavidyalam) | 2.110 | CF | 63 | 20.08.2024 | 84 | C8& C7 | 22,000.00 | 17.09.2024 |
| 10 | JMC/WD/CF/Interlock paving /2024- 41 | Interlock paving work of Station Road | 6.694 | CF | 77 | 03.09.2024 | 84 | C7& C6 | 67,000.00 | 01.10.2024 |
| 11 | JMC/WD/CF/Durayappa Stadium-2024 -43 | Renovation of Duraiyappa Stadium Sports Complex stage I | 19.394 | CF | 77 | 03.09.2024 | 175 | C6& C5 | 194,000.00 | 01.10.2024 |
| 12 | JMC/WD/CF/ Kakkaitivu –bo stage II/2024-36 | Renovation of Parapet wall at Kakaitivu Compost yard Stage II | 4.661 | CF | 63 | 20.08.2024 | 84 | C8& C7 | 47,000.00 | 17.09.2024 |
| 13 | JMC/WD/CF/Kakkaitivu –bo stage III-/2024-37 | Renovation of Parapet wall at Kakkaitivu compost yard Stage III | 2.966 | CF | 63 | 20.08.2024 | 84 | C8& C7 | 30,000.00 | 17.09.2024 |
| 14 | JMC/WD/CF/Building Extension 2024-42 | Construction of Building Extension at Kakaitivu compost yard | 5.577 | CF | 77 | 03.09.2024 | 84 | C7& C6 | 56,000.00 | 01.10.2024 |
| 15 | JMC/WD/PSDG/Kakkaithivu/2024-32 | Construction of Parapet wall at Kakkaithivu recycling centre – stage I | 12.349 | SD | 77 | 03.09.2024 | 119 | C6 & C5 | 124,000.00 | 01.10.2024 |
| 16 | JMC/WD/PSDG/Public Lib/ 2024 – 33 | Construction of retaining wall in front of Jaffna Public Library | 4.614 | SD | 63 | 20.08.2024 | 84 | C8 & C7 | 47,000.00 | 17.09.2024 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**
**29.05.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(CR 42511) A-1

# முல்லைத்தீவு பெண் கொலை: கணவன் உட்பட 3பேர் கைது

முல்லைத்தீவு, மே 29

முல்லைத்தீவு பூதன் வயல் கிராமத்தில் 23 வயது இளம் குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் மற்றும் இருபெண்கள் உள்ளிட்ட மூவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

பூதன் வயல் கிராமத்தைச் சேர்ந்த இளைஞனை வவுனியா ஆசிக்குளத்தைச் சேர்ந்த 23 வயதுடைய பெண் திருமணம் செய்துள்ளார். 7 மாதங்களாக இருவரும் பூதன்வயல் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர்.

தனது மனைவி வீட்டுக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துவிட்டாரென முறைப்பாடு செய்வதற்கு கணவன் முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றுள்ளார். பொலிஸார் வீட்டுக்கு வருவதற்கிடையில், அயலவர்கள் கிணற்றிலிருந்து பெண்ணை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனாலும் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனையில் பெண்ணின் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற சந்தேகம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டார். கணவருடன் வாழ்ந்து வந்த நெடுங்கேணியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணும் சந்தேகத்தில் கைதானார். இவர்கள் இருவரையும் விட மேலும் ஒரு பெண்ணையும் முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-19)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்

077 334 1281

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 05 . 1945



மறைவு 23 . 05 . 2024

### றோக் அருளானந்தம் புஸ்பம்மா

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கடற்கரை வீதி புனித ஆரோக்கியநாதர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட றோக் அருளானந்தம் புஸ்பம்மா அவர்கள் கடந்த 23.05.2024 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - செபமாலை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளப்பு செல்லையா - அக்னேஸ் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற றோக் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணாறெமிங்டன் மற்றும் எட்மன்பேர்க் (வெஸ்லி - அமெரிக்கா), றொசாஜினி (றஜிதா - பிரான்ஸ்),ஜெலாஜினி (விஜிதா - அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), டினேஸ்ராஜ் (சாரதி - MOH வேலணை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரனி நிக்சன் (பிரான்ஸ்), றோகினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், றொஸ்கா, கிலியோ, ஒலிவியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, அருட்சகோதரி மேரி மெற்றில்டா, பிலிப்பு, அலேஸ், றோசம்மா மற்றும் வரவெணிக்கம் (சித்தா - புதுக்குடியிருப்பு), சின்னப்பு (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அமலதாஸ், அன்ரன், குலியேல் (நவம்), இராயப்பு, தங்கமலர், இராசமலர், மரியாம்பிள்ளை, சலமோன் மற்றும் சாள்ஸ் (அமெரிக்கா), யோனாஸ் (அமெரிக்கா), ராஜேஸ்வரி (லண்டன்), சேவியர் (கொத்தலா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் (லண்டன்), அக்னேஸ் (மனோான் - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி முற்பகல் 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:- இறுதிக்கிரியைகளை நேரலையாக இவ்விணைப்பில் பார்க்கலாம்.**
Cudartv
https://youtube.com/@cudartv4267?si=FUYJYNrZLEEuAGzO

தகவல்: குடும்பத்தினர்
ஜெலாஜினி - 077 935 3126
டினேஸ் ராஜ் - 076 677 8126
021 222 6931

இல. 107/3, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/55207) J-1

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு. செல்வகுமாரன்** அவர்களின் அன்புத் தாய்

**செல்வரத்தினம் வள்ளியம்மை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாயின் மடியில் 07.09.1930
மண்ணின் மடியில் 23.05.2024

பிரிவால் துயருறும்:
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

(CS/55208) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1941



மறைவு 28 . 05 . 2024

### கமலாசனி துரைசிங்கம்

அச்சுவேலி உலவிற்குள பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு (கிறான்பாஸ்) மற்றும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாசனி துரைசிங்கம் நேற்று (28.05.2024) செவ்வாய்க்கிழமை கோப்பாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், கலாதேவன் (சஞ்சீவ்), கலாவதனன் (பழனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரேகா, மதுரி ஆகியோரின் மாமியாரும், திவ்யா, ஜெரோம், ஜோயல், ஸ்நேகா ஆகியோரின் பிரிய அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, தம்பிராசா, லோகேஸ்வரன், சந்திரவதனா, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையா மற்றும் இராஜேஸ்வரி, நாககன்னி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2024) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. லோகேஸ்வரன்
077 640 1261

வசந்தமாளிகை
கிழவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி.

(cs 55211) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 08 . 1947



மறைவு 27 . 05 . 2024

### யோகவனம் சிவகருணியமலர்

வசாவிளானை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோகவனம் சிவகருணியமலர் (துளசி அம்மா) நேற்று முன்தினம் (27.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையன் - அபிராமி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - சீதைஇலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோகவனம் அவர்களின் அன்பு மனைவியும், துளசிதரன் (உரிமையாளர் North Cheam Traditional Fish and Chips - UK) அவர்களின் பாசமிகு தாயாரும், பிரியதர்சினி (நடன ஆசிரியர் - UK ) அவர்களின் அன்பு மாமியாரும், Mellissa (UK), Aron (UK), Chason (UK) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், முருகையா, காலஞ்சென்றவர்களான சிவராசா, சிவபாதசுந்தரம், சரஸ்வதி, யோகமலர் மற்றும் சிவலோகநாயகி, சசிகலா, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.05.2024) புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள White House அந்தியகால நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
யோ.துளசிதரன் (UK) - மகன்

(CS/55209) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு...

ஜனாதிபதி ரணிலுக்கு மீண்டும் ஒரு முறை பதவி நீடிப்பு வழங்கப்படவேண்டும் என்று பாலித ரங்கே பண்டார அண்மையில் கோரியிருந்தார். அவருடைய கோரிக்கைக்கு பல தரப்பினரும் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தனர். இந்த நிலையிலேயே, தற்போது ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

அது தொடர்பில் பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இன்னும் வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை. எதிர்வரும் ஜூலை மாதமளவில் வங்குரோத்து நிலையில் இருந்து மீளமுடியும் என ஜனாதிபதி நம்புகின்றார். எனவே, தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ அவசியமில்லை. நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணையவேண்டிய தருணம் இது. ஜனாதிபதிக்கு ஐந்தாண்டு அவகாசம் வழங்கமுடியாவிட்டால் குறைந்தது இரு வருடமாவது வழங்கவேண்டும், இதற்குரிய யோசனையை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

இதன்படி இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் நடத்தமுடியும். தேவையேற்படின் சர்வஜன வாக்கெடுப்பைக்கூட நடத்தலாம். இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுக்கின்றோம். இது ஜனநாயகத்துக்கு எதிரான கோரிக்கை அல்ல. அதேபோல ஜனநாயக உரிமையைப் பறிக்கும் செயலும் அல்ல. நாட்டின் நலன் கருதி முன்வைக்கப்படும் அவசரக் கோரிக்கையாகும் - என்றார். (அ-ம-44)

## புலிகளை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளருக்கு விசா வழங்கப்பட்டமை நல்ல விடயமாகும். எமக்கு ஒளிப்பதற்கு ஒன்றுமில்லை. விசா வழங்கி இருக்காவிட்டால் தான் அது பிரச்சினையாக மாறி இருக்கும். 'முள்ளிவாய்க்கால் சென்றிருந்தேன், நினைவேந்தல் நடத்தும் சுதந்திரம் இருந்தது, பொலிஸார், இராணுவத்தினர் இருக்கவில்லை' என அவர் (சர்வதேச மன்னிப்புச் சபை செயலாளர்) குறிப்பிட்டிருந்தார். அனுமதி வழங்கி இருக்காவிட்டால் நினைவேந்தல் சுதந்திரம்கூட இல்லை என்ற கோணத்தில் பிரசாரம் இடம்பெற்றிருக்கும். உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை உள்ளது. ஆனால் புலிகளை நினைவுகூரும் உரிமை கிடையாது. இதனை சர்வதேச மன்னிப்புச்சபை செயலாளரிடமும் கூறினோம்" - என்றார். (அ-ம-44)

## யாழ்ப்பாணம்...

ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஒருவர் விளக்கமறியலிலும் மற்றையவர் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வரையில் நேற்றுமுன்தினம் இருவர் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்துள்ளனர். அவர்கள் மதுபோதையில் இருந்ததுடன், மோட்டார்சைக்கிளின் பின்னால் இருந்தவர் மருத்துவமனையின் கண்ணாடியைத் தனது கைகளால் தாக்கியுள்ளார். இதன்போது அவர் காயமடைந்தார். தொடர்ந்து மருத்துவரின் சிபாரிசு இல்லாமல் சிகிச்சை பெறும் அலகுக்குள் அவர்கள் பிரவேசித்ததுடன், அங்கிருந்த பிறிண்டரால் ஊழியர் ஒருவரைத் தாக்கிக் காயங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து செயற்பட்டு அவர்களைக் கைது செய்தனர். காயமடைந்த நபர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மற்றையவர் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர்களின் தாக்குதலில் காயமடைந்த மருத்துவமனை ஊழியர் சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## 450,000...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயரான டானியல் தியாகராஜா வின் காலத்தில் இருந்து, மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் தமது முகாமை அமைத்திருந்தனர். இந்த நிலையில் அண்மையில் அந்த முகாம் இராணுவத்தால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்தே இராணுவத்தினர் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மின்சார நிலுவையை வைத்துவிட்டுச் சொல்லாமல்கொள்ளாமல் சென்றுள்ள விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் பத்மதயாளன் ஆண்டகையைத் தொடர்புகொண்டுகேட்டபோது; "சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினர் குறித்த கட்டடத் தொகுதியில் தமது முகாமை இயக்கி வந்தனர். அந்தக் காலப்பகுதியில் முகாமின் மின் கட்டணமாக 4 இலட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபா நிலுவை செலுத்தப்படாமல் உள்ளது. இந்தத் தொகையை இராணுவமே செலுத்தவேண்டும்" - என்றார். (அ-ம-125)

## பொதுவேட்பாளர்...

அவர் தற்போது காய்நகர்த்தி வருகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

சுமந்திரன் மேற்கொள்ள இருக்கின்ற பொதுவேட்பாளர் குறித்த கலந்துரையாடலுக்கு எனக்கு எந்தவித அழைப்புகளும் விடுவிக்கப்படவில்லை. ஆனால், இது எம்மைத் திசை திருப்பும் நடவடிக்கையாகவே அமையும்.

எங்கள் சிவில் சமூகத்தினர், தமிழ் மக்கள் சார்பில் ஒரு பொதுவேட்பாளர் நிறுத்தப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இது தொடர்பான பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த விடயத்தில் கருத்து வேறுபாட்டுக்குரியதாக சில கருத்துகளை வெளிப்படுத்தி திசைதிருப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஆதலால், சிவில் சமூகத்தினர் மிக அவதானமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக எதிர்க் கருத்தியலைக் கொண்டிருப்பவர்கள் எமக்கு எழுத்து மூலம் தரலாம். அதற்கான காரணத்தை அல்லது விளக்கத்தை வழங்குவது எமது கடமை. ஆகவே அத்துடன் இதனை நிறுத்திக்கொள்ளவேண்டும். பொதுவெளியில் இதனைக் கொண்டுசெல்வது பிழையான நடவடிக்கையே.

சுமந்திரன் இதுவரையில் தமிழ்த் தேசியத்துடன் நின்றவரல்லர். அவர், 'நான் அதற்கு பயந்தவன் இல்லை, இதற்குப் பயந்தவன் இல்லை' என்று சொல்வதில் இருந்தே தெரியும் அவர் தமிழ்த் தேசியத்தில் ஈடுபாடு அற்றவர் என்பது. அதற்காக தமிழரசுக் கட்சியை அவர் தன்னுடைய கைப்பொம்மையாக மாற்றக்கூடாது. ஊடகங்களும் இது தொடர்பில் புரிந்து நடக்க வேண்டும் - என்றார். (அ-ம-125-20)

## மாணவிகளுக்குத்...

கல்வி வலயத்துக்குட்பட்ட ஊர்காவற்றுறைப் பகுதியில் அமைந்துள்ள பெண்கள் பாடசாலையொன்றில் கற்கும் மாணவிகள் தங்கும் விடுதிக்குப் பொறுப்பான' கிறிஸ்தவ அருட்சகோதரி ஒருவரின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் அங்கு தங்கியிருந்த பத்து வயதுக்கும் பதினேழு வயதுக்கும் இடைப்பட்ட 11 பாடசாலை மாணவிகளே நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, குறித்த அருட்சகோதரிக்கு எதிராக முறைப்பாடு அளித்துள்ளனர்.

அகப்பைக் காம்பு மற்றும் தடியால் தாக்குவது, தலைமுடியைப் பிடித்துச் சுவருடன் தாக்குவதென விடுதிக்குப் பொறுப்பான அருட்சகோதரி கடந்த மூன்று வருடங்களாகத் தம்மைச் சித்திரவதை செய்வதாக மாணவிகள் கண்ணீருடன் முறையிட்டுள்ளனர்.

புதுவகையான ஆங்கில உச்சரிப்பைப் பேசச் சொல்வது, ஆங்கிலத்தை முறையாகப் பேசாதது, பிரார்த்தனையை முறையாக மனனம் செய்யாதது உள்ளிட்ட காரணங்களுக்காகவே அருட்சகோதரி தாக்குதல் நடத்தியதாகவும், பாடசாலை மாணவிகளுடன் 'பயன்படுத்தத்தகாத' வார்த்தைகளால் திட்டியதாகவும் மாணவிகள் தங்களின் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அந்த அருட்சகோதரி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவரை ஒருநாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொலிஸாரிடம் சரணடைந்த 11 மாணவிகளும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைச் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு, அவர்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர்களின் உடலில் தாக்குதலுக்கு உள்ளான தழும்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து 11 மாணவிகளும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-125-26-66)

## வடமாகாணத்தில்...

வரை வடக்குக்கு மிதமான மழை கிடைக்கும் சாத்தியம் உள்ளதாகவும் வானிலையாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாண்டுக்கான தென்மேற்குப் பருவக்காற்று இன்று (நேற்று) இலங்கையின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு வீசத் தொடங்கியுள்ளது. இதனால், இலங்கையின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் உயர்வாக இருக்கும். அத்தோடு கடற் பகுதிகளில் அலைகளின் உயரம் உயர்வாகக் காணப்படும். கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதால் இலங்கையின் அனைத்துப் பகுதி மீனவர்களும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

இதேவேளை - தென்மேற்குப் பருவத்தின் தொடக்க நிலைமை காரணமாக அதிகளவிலான ஈரப்பதன் நிறைந்த காற்றினால் இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறைப் பகுதிகளுக்கு கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால், அந்தப் பகுதிகளில் வெள்ள இடர்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, மேற்கூறிய மாவட்டங்களின் மக்கள் கனமழை தொடர்பாகவும், வெள்ள இடர்கள் தொடர்பாகவும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (அ-ம-66)

## தேர்தல்கள்...

பொதுத்தேர்தலையும் நடத்துவோமாக இருந்தால் புதிதாக வேறுயாராவது பதவி நிலைகளுக்கு வருகின்ற பட்சத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகள் யாவும் மாற்றமடையலாம். இது எமது பொருளாதாரத்தில் தாக்கத்தைச் செலுத்தலாம். ஆதலால், ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத்தேர்தலையும் பிற்போடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார முன்வைத்துள்ள கருத்துகளை நான் வரவேற்கின்றேன். இதனை இவர்கள் எவ்வாறு நிறைவேற்றப்போகின்றார்கள்? என்று எனக்குத் தெரியவில்லை. மக்கள் தீர்ப்பின்மூலம் நிறைவேற்றப்போகின்றார்களா? அல்லது நாடாளுமன்ற பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றப்போகின்றார்களா? என்பது குறித்து சிந்திக்கவேண்டும்.

பெரமுனவினர் தற்போது எத்தனை அறிக்கைகளை வழங்கினாலும், என்னதான் தெரிவித்தாலும் மக்கள் முன்னிலையில் தேர்தலுக்காகச் சென்றால் தமக்கு வெற்றிகிட்டாது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ஆதலால், தேர்தலைப் பிற்போட பெரமுனவினர் ஆதரவை வழங்கவே செய்வார்கள்.

ரணில் விக்கிரமசிங்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர் என்பதற்கு எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனால், அவரை எதற்காகக் கொண்டு வந்தார்கள்? மக்களால் தூக்கி எறியப்பட்ட ஜனாதிபதிக்குப் பதிலாக இவரைப் பதவிக்கு கொண்டு வந்தார்கள். தங்களால் முடியாததை இவர் செய்வார் என்ற அடிப்படையிலே பதவிக்குக் கொண்டுவரப்பட்டார். இவர் தனது கெட்டித்தனத்தை பொருளாதார ரீதியாகக் காட்டியுள்ளார். பொருள்களின் விலை, வரிசைமுறை அவை அனைத்தும் நீக்கப்பட்டு தற்பொழுது ஏதோ நாடு இயங்கிக் கொண்டிருக்கின்றது. மக்களுடைய ஆணையால் அவர் வரவில்லை என்றால் எதற்காக அவரை இந்த இரண்டு வருடங்கள் விட்டு வைத்திருக்கவேண்டும். இதுவரை காலமும் இருக்கின்ற ஜனாதிபதியை இன்னும் ஒரு இரண்டு வருடத்துக்குப் பயணிக்க விடுவதால் எந்தப் பிரச்சினையும் வரப்போவதில்லை. நாடு வங்குரோத்து நிலையை அடைகின்றபொழுது அவரை கொண்டுவந்துவிட்டு தேர்தலை பிற்போடுகின்றபொழுது அவர் மக்கள் ஆணையற்றவர் என்று கூறுவதில் எந்தவிதமான பயனும் இல்லை - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல் குற்றச்சாட்டு: ஆசிரியருக்குப் பிணை

யாழ்ப்பாணம், மே 29

மாணவிகளுக்குப் பாலியல் துன்புறுத்தல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலை ஆசிரியருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் அந்த ஆசிரியர் முற்படுத்தப்பட்டார். இதன்போது அவரைப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.

இதேவேளை - குறித்த ஆசிரியருக்கு எதிரான திணைக்கள ரீதியான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பான அறிக்கையொன்றும் வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

## சோற்றுக்குள்...

அந்த உணவகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உணவு வாங்கியவரின் சோற்றுப் பார்சலில் மட்டத்தேள் காணப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டதையடுத்து, கடந்த சனிக்கிழமை அந்த உணவகம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முன்னர் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எவையும் பின்பற்றாமல் அந்த உணவகம் செயற்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டதையடுத்து, உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது உணவகத்தின் உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், திருத்தவேலைகள் முடியும் வரையில் உணவகத்தை 'சீல்' வைத்து மூடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

பெண் வேலையாள் தேவை
துறைமுகம் வீதி, மாதகலில் உள்ள பலசரக்கு கடைக்கு பெண் வேலையாள் தேவை.
(25 - 30 வயதிற்கிடைப்பட்ட பெண்)
தங்குமிட வசதியும் உண்டு.
தொடர்பு:- 077 501 6255

## விடுவித்த...

அதற்கமைய ஜூன் மாதம் பத்தாம் திகதி வரை விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்லவேண்டாம் என காணி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது கண்ணிவெடிகள் காணப்படும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டால் அந்தப் பகுதிகளைத் தவிர்த்து ஏனைய காணிகளுக்குள் எதிர்வரும் பத்தாம் திகதிக்குப் பின்னர் பொதுமக்கள் தங்களின் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கண்ணிவெடிகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன் பின்னர் குறித்த பகுதிகள் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அறிவித்தல் விடுக்கப்பட்டதும் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி தங்களின் காணிகளுக்குள் செல்லமுடியும்.

வசாவிளான் கிழக்கு (ஜே/ 244), வசாவிளான் மேற்கு (ஜே/ 245), பலாலி வடக்கு (ஜே/ 254), பலாலி கிழக்கு (ஜே/ 253), பலாலி தெற்கு (ஜே/ 252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.83 ஏக்கர் காணிகள் விவசாய நடவடிக்கையின் நிமித்தம் அண்மையில் விடுவிக்கப்பட்டன. இந்தக் காணிகளுக்குள் பிரவேசிக்கவே தற்போது தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## காலணிகளில்...

என்றும் இது தொடர்பாக தமிழ் மக்களிடம் அந்த நிறுவனம் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் ஐங்கரநேசன் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கார்த்திகைப் பூ வெறும் பூ அல்ல. தமிழ் மக்களின் வாழ்வியலிலும் உணர்வுகளிலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் இரண்டறக்கலந்துள்ள அவர்களின் உயிர்ப்பூ. இது தென்னிலங்கை நிறுவனமான குறித்த காலணி உற்பத்தி நிறுவனத்துக்குத் தெரியாததல்ல. ஆனாலும், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்க்கும் விதத்தில் இந்நிறுவனம் தனது இலேசுரக காற்செருப்புகளில் கார்த்திகைப் பூவைப் பொறித்து விற்பனைக்கு விட்டுள்ளது. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. குறித்த நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காற்செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெறல்வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியமைக்காக வருத்தமும் தெரிவிக்கவேண்டும்.

இலங்கையில் புத்தபெருமானின் உருவத்தை உடலில் பச்சை குத்தியவர்களும், பௌத்த சின்னங்கள் அச்சிட்ட ஆடைகளை அணிந்தவர்களும் பௌத்தத்தை அவமதித்ததாக, பௌத்த மதத்தினரின் மனதைப் புண்படுத்தியதாகக் கூறி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கார்த்திகைப்பூவும் புனிதமான ஒன்றாக, அவர்களின் தேசிய அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனால் கார்த்திகைப்பூவைக் காற்செருப்பில் பொறித்திருப்பதைத் தங்களை இழிவுபடுத்தும் ஒன்றாகவே தமிழர்கள் கருதுகின்றனர் - என்றுள்ளது. (அ-ம-27)


## பொலிஸ்...

பொலிஸ் அலுவலர் ஒருவர் தன் நண்பர்களுடன் இணைந்து ஐஸ் போதைப்பொருளை நுகர்கின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து 2 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-113)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
A/L 2026
தொழில்நுட்பப் பிரிவு
• ஆரம்பம் - 01.06.2024 (சனிக்கிழமை)
• நேரம் - காலை 8.30
A/L 2024, 2025
வகுப்புகள் நடைபெறுகின்றன
தொடர்புகளுக்கு: 077 017 5346

## மரண அறிவித்தல்

மலர்வு
13 . 01 . 1971



உதிர்வு
28 . 05 . 2024

### குமாரசாமி சுகந்தன்

யாழ்ப்பாணம் தெற்கு சில்லாலையைப் பிறப்பிடமாகவும் தில்லையம்பலப் பிள்ளையார் வீதி ஓயார்சின்னக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சுகந்தன் அவர்கள் நேற்று (28.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 610 9094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.